விலை ரூபா: 15.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 கார்த்திகை 09 வியாழக்கிழமை (25.11.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 341

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## நல்லிணக்க ஆணைக்குழு திருமலை விஜயம்

(திருகோணமலை)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அமர்வு எதிர்வரும் டிசம்பர் 3ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை திருகோணமலை மாவட்டத்தில் இடம் பெறவுள்ளது.

திருகோணமலை செல்லவுள்ள ஆணைக்குழு உறுப்பினர்கள் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி முதல் 5 மணி வரை திருகோணமலை மாவட்ட செயலகத்தில் சாட்சியங்களை பதிவு செய்யவுள்ளனர்.

4ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிமுதல் நண்பகல் (15ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் 60 மாணவர்கள் வைத்தியசாலையில்

(கொழும்பு)

நுவரெலியா ஹைபொரஸ்ட் இலக்கம் 3 தமிழ் வித்தியாலத்தை சேர்ந்த மாணவர்களில் கிருமிநாசினியை சுவாசித்த மேலும் 60 பேர் நுவரெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் 19 பேர் இதே போன்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்கு பின்பு வீடு திரும்பினர்.

இந்த நிலையில் நேற்று பாடசாலைக்குச் சென்ற மாணவர்களில் பலர் வகுப்பறை மண்டபத்துக்கு சென்றபோது அந்த மாணவர்களுக்கு மயக்கமும் குமட்டலும் உதடுகளில் வெடிப்பும் ஏற்பட்டுள்ளது. (16ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு மாகாணத்துக்கு புதிய செயலாளர்கள்

(திருகோணமலை)

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளராக கால்டீன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அத்துடன் விவசாய அமைச்சின் செயலாளராகவிருந்த பத்மநாதன் வடக்கு மாகாண திட்டமிடல் அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.


இந் நியமனங்களை வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி வழங்கியுள்ளார். (ச-5)



'நீர்க்காகம்' கூட்டு இராணுவப் பயிற்சியின் போது...

## உள்ளே...

அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க மேல் மாகாண கல்வித் திணைக்களத்தின் க.பொ.த.(சா/த) முன்னோடிப் பரீட்சை வினாத்தாள்.




# பிணையில் செல்வதற்கு ஏற்பாடு செய்யுங்கள்

## புதிய நீதி அமைச்சரிடம் கைதிகள் கோரிக்கை

(கொழும்பு)

ஒரு சட்டவாளர் என்ற அடிப்படையிலும் எமது பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளக்கூடியவர் என்ற காரணத்தினாலும் எம் அனைவருக்கும் பிணையில் செல்வதற்கு விசேட ஏற்பாடு ஒன்றைச் செய்து தரும்படி அரசியல் கைதிகளாகிய நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம். இவ்வாறு புதிய நீதியமைச்சராக பதவியேற்றிருக்கும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு தமிழ் அரசியல் கைதிகள் சார்பில் கடிதமொன்று நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 30ஆம் திகதி லண்டன் பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 30ஆம் திகதி லண்டனுக்கு விஜயம் செய்ய உள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. போர்க் குற்றச் செயல்களின் அடிப்படையில் ஜனாதிபதி லண்டனில் வைத்து கைது செய்யப்படக்கூடுமென முன்னர் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் இலங்கை மாணவர்கள் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் கலந்து கொள்ளும் நோக்கில் ஜனாதிபதி லண்டனுக்கு விஜயம் செய்ய உள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நான்கு நாட்கள் லண்டனில் தங்கியிருப்பார் (16ஆம் பக்கம் பார்க்க)

## நாடுமுழுவதும் நேற்று கடும் மழை பல மாவட்டங்கள் வெள்ளத்தில்!

(கொழும்பு)

நாடுமுழுவதும் கடும் மழை மற்றும் வெள்ள நிலைமை காரணமாக குறைந்தபட்சம் 15ஆயிரத்து 914 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். 61 வீடுகளுக்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. அத்துடன் 232 வீடுகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்தது.

கண்டி, மாத்தறை, கம்பஹா, நுவரெலியா, மொனராகலை, குருநாகல் ஆகிய மாவட்டங்களில் கடும் மழை காரணமாக 3404 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன.

பேஸ் லைன் சந்தியை தொடக்கும் ஹைலெவல் வீதி, ரொபெட் குணவர்த்தன மாவத்தை தும்முல்ல சந்தி, ராஜகிரியவின் சில பகுதிகள் என்பன (15ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைப் பெண் இந்தியாவில் தற்கொலை சி.பி.ஐ. விசாரணைக்கு நீதிமன்றம் பணிப்பு

(சென்னை)

இந்திய பொலிஸாரினால் வல்லுறவுக்கு ஆளான தனது மகள் தற்கொலை செய்து கொண்டதாக இலங்கையின் பெண் அகதியொருவர் கூறியதற்கு பதிலளிக்குமாறு தமிழ்நாடு மாநில உள்துறை செயலாளர், பொலிஸ் பணிப்பாளர் நாயகம், மத்திய புலனாய்வு பணியக பணிப்பாளர் ஆகியோருக்கு நீதிபதி கே.சுகுனா பணித்துள்ளார்.

26 வயதான இலங்கை அகதிப் பெண் கரூர் மாவட்டத்தில் பொலிஸாரினால் தாக்கப்பட்டு வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட பின் தற்கொலை செய்து கொண்டதாக கூறப்படுகிறது. இறந்த பெண்ணின் தாய் மத்திய (16ஆம் பக்கம் பார்க்க)

# சமாதானத்துக்கு பின்னான யுத்தத்துக்கு தமிழீழ விடுதலைப்புலிகளே பொறுப்பு!

## வைத்தியர் சிவபாலன் சாட்சியம்

(கொழும்பு)

2002ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் சமாதானம் ஏற்படுவதற்கு கிடைத்த சந்தர்ப்பத்தை தவறவிட்டதன் பின்னர் ஏற்பட்ட யுத்தத்திற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் விடுதலைப் புலிகளே பொறுப்பு என தமிழ் மக்கள் நம்புவதாக இறுதிக் கட்ட யுத்தத்தின்போது முள்ளிவாய்க்கால் வைத்தியசாலையில் கடமையாற்றிய வைத்தியர் எஸ்.சிவபாலன் தெரிவித்தார்.

நேற்று புதன்கிழமை மாலை கொழும்பு லக்ஸ்மன் கதிர்காமர் நிலையத்தில் இடம்பெற்ற கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து சாட்சியமளித்த வைத்தியர் எஸ்.சிவபாலன் கூறியதாவது,

இந்த யுத்தம் காரணமாக பல்லாயிரக்கணக்கான உயிர் மற்றும் உடமைகள் அழிந்துள்ளன. அது மாத்திரமில்லா (15ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு ஆயுதம் விற்க இந்திய அரசு முயற்சிக்கும்

### சர்வதேச செய்திச் சேவை தெரிவிப்பு

(கொழும்பு)

சீனாவின் ஆதிக்கம் இலங்கையில் அதிகரித்து வருவதையடுத்தே இந்தியா இலங்கைக்கு ஆயுதங்களை விற்பனை செய்யும் ஏது நிலைகள் காணப்படுவதாக ஐ.ஏ.என்.எஸ். தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையும் இந்தியாவும் தமக்கிடையிலான பாதுகாப்பு தொடர்பான பேச்சுவார்த்தையை அடுத்த வருடத்தில் ஆரம்பிக்கவுள்ளது.

ஐ.ஏ.என்.எஸ்.செய்தி சேவையின் தகவல்படி தமிழீழ விடுதலைப் புலிகளின் பின்னர் மாறியுள்ள பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பிலே இந்தப் பேச்சுவார்த்தை இடம் பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த விடயம் தொடர்பான ஆரம்ப கலந்துரையாடல் இன்று இலங்கைக்கு வரும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிரு (16ஆம் பக்கம் பார்க்க)

# சீன இந்திய அதிகார போராட்டத்தின் பகடைக் காயாக மாறும் இலங்கை

## ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

சீன இந்திய அதிகார போராட்டத்தின் பகடைக் காயாக இலங்கை மாற்றமடையக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

சீனா மற்றும் இந்தியா ஆகியவற்றின் பிராந்திய அரசியல் ஆதிக்கத்தை சரியாக புரிந்து கொள்ளத் தவறினால் சர்வதேச ரீதியில் இலங்கைக்குப் பாதிப்புக்கள் ஏற்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் காமினி ஜயவிக்கிரம பெரேரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது, பொருளாதார நலனுக்காக நாட்டின் பாதுகாப்பை இழந்து விடக் கூடாது. இந்த விடயம் குறித்து அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். பிராந்திய நாடுகளின் அதிகார மேலாதிக்கத்தை புரிந்துகொண்டு செயற்படாவிட்டால் சர்வதேச யுத்தகளமாக இலங்கை மாற்றமடைவதனை தடுக்க முடியாது.

எவ்வாறெனினும் இவ்வாறான துரதிர்ஷ்டவசமான சம்பவங்கள் இடம்பெறக் கூடாது என தாம் பிரார்த்திப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். ஆப்கானிஸ்தான் மற்றும் சூடான் ஆகிய நாடுகளுக்கு ஏற்பட்ட நிலைமை இலங்கைக்கு ஏற்பட்டு விடுமோ என தாம் அஞ்சுவதாக தெரிவித்த அவர் சீனா துறைமுக மொன்றை அமைத்து வரும் அதேவேளை சீன இலங்கை உறவுகள் குறித்து இந்தியா தீவிர கவனம் செலுத்தி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

# உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பில் எந்தவித சட்ட அடிப்படைகளும் இல்லை

## வரவு செலவுத் திட்ட விவாதத்தில் விநாயகமூர்த்தி எம்.பி. உரை

(கொழும்பு)

வடக்கிலுள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான பிரகடனத்துக்கு எந்த சட்ட அடிப்படைகளும் இல்லை. இவ் உயர் பாதுகாப்பு வலயப் பிரகடனம் நாடாளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டனவா என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

வரவு செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் கூறியதாவது,

இந்த வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவினங்களுக்காக ரூபாய் 214 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது என்பதுடன் இவ்வருடம் 2010 பாதுகாப்புச் செலவினத்துக்காக நிதி ஒதுக்கீட்டில் இருந்து 13 பில்லியன் அதிகரிக்கப்பட்டிருப்பதை நாம் காண்கின்றோம்.

வரவு செலவுத் திட்டத்தின் போது உற்பத்திப் பொருள்களது விலைகள் அதிகரிக்கப்படுகின்றமையே வழமையாக இருந்தது. ஆனால் இந்த வரவுசெலவுத் திட்டத்தால் விலை உயர்வு தொடர்பில் எதுவும் செய்ய முடியாதிருப்பது தெரிகிறது.

யுத்தம் முடிபுறுத்தப்பட்டு ஏறக்குறைய ஒன்றரை வருடங்கள் கடந்த பின்பும் இலங்கையில் நுகர்வோர் மாதாந்தம் தாம் விரும்பியவாறு கொள்வனவை மேற்கொள்ள முடியாத நிலையிலேயே உள்ளனர்.

வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பால் அவர்களது மாத வருமானத்தின் மூலம் செலவினத்தை ஈடு செய்ய முடிபதில்லை.

**உயர் பாதுகாப்பு வலயம்**

வடக்கில் உயர் பாதுகாப்பு வலயப் பிரகடனம் கொண்டு வரப்பட்ட பகுதிகள் தொடர்பாகவும் எப்பொழுது கொண்டுவரப்பட்டது என்பது தொடர்பாகவும் பாதுகாப்பு அமைச்சர் எமக்கோ அல்லது இந்த கௌரவ சபைக்கோ உரிய விளக்கம் கொடுப்பாரா? இவ்வுயர் பாதுகாப்பு வலயப் பிரகடனங்கள் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டனவா? உண்மையில் வடக்கிலே இவ்வாறான உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான பிரகடனத்திற்கு எந்த சட்ட அடிப்படையும் இப்போது இல்லை .

வடக்கின் 30 வீதமான பகுதியான வலிகாமம் வடக்கு படையினருடைய ஆதிக்கத்திலுள்ளதுடன் அவை உயர்பாதுகாப்பு வலயத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டிருப்பதாக கூறப்பட்டுள்ளது.

48 கிராம சேவகர்பிரிவுகளைக்கொண்டமைந்த வலிகாமம் வடக்கில் 28 கிராம சேவகர்பிரிவுகள்படையினரின் ஆதிக்கத்திற்கு உட்பட்டுக்காணப்படுவதுடன் யாரும் சென்று மீளக் குடியமர அனுமதிக்கப் படவில்லை.

12 கிராம சேவகர் பிரிவுகளிலேயே மக்கள் முழுமையாக குடியமர்ந்துள்ளனர் என்பதுடன் 5 கிராம சேவகர் பிரிவுகளும் மக்கள் பகுதியாகவே குடியமர்ந்துள்ளனர். பலாலி விமான நிலையம், பலாலி ஆசிரியர் கலாசாலை, மயிலிட்டிமீன்பிடித்துறை, மயிலிட்டி இருதய சிகிச்சை வைத்திய சாலை, காங்கேசன் துறை துறைமுகம், காங்கேசன்துறை சீமெந்துத்தொழிற்சாலை, கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம், மாவிட்டபுரம் கந்த சுவாமி ஆலயம், தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலை, தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலை, தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி ஆகியவை உயர் பாதுகாப்பு வலயம் என்றழைக்கப்படும் பகுதியிலுள்ளேயே அடங்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

வலிகாமம் வடக்கு, மண்டைதீவு, யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புத்துறை வரையான பகுதி கரம்பகம், எழுதுமட்டுவாழ் வடக்கு, தெற்கு, நாகர்கோவில் மற்றும் மறுவன்புலோ ஆகிய பகுதிகளும் உயர்பாதுகாப்பு வலயம் என்று அழைக்கப்படும் பகுதியிலுள்ளேயே அமைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. வலிகாமம் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த ஒரு லட்சம் பேரும் தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்த ஒரு இலட்சம் பேரும் மீளவும் தங்கள் சொந்த இடங்களுக்குச் சென்று குடியமர்வதற்கு உயர் பாதுகாப்பு வலயம் என்றழைக்கப்படும் பிரகடனத்தின் காரணமாக அனுமதிக்கப்படவில்லை.

இதுதொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் நாங்கள் தொடர்ந்த அடிப்படை உரிமை மீறல் வழக்கு இன்னும் விசாரணையிலுள்ள நிலையில் அண்மையில் யாழ்மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார், ஜேர்மனியில் இருந்து வருகைதந்திருந்த பிரதிநிதிகளுடனான சந்திப்பொன்றில் யாழ்ப்பாணத்தில் உயர் பாதுகாப்பு வலயமென்று ஏதும் இல்லை என்றும் கண்ணிவெடி அகற்றப்பட வேண்டிய இடங்களே காணப்படுகின்றன என்று கூறியிருந்ததை இங்கு நான் வன்மையாகக் கண்டிக்கிறேன் என்றார். (ச)

# தேர்தல் திருத்தச் சட்டமூலம் தொடர்பான செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

சிந்தனைக் கூடம் - யாழ்ப்பாணம் எனும் ஆய்வு, அபிவிருத்திக்கான அமைப்பின் ஏற்பாட்டில் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நாவலர் வீதியில் அமைந்துள்ள தியாகி அறக்கொடை நிறுவன மண்டபத்தில் அரசியலமைப்புக்கான 18 ஆவது சீர்திருத்தமும் உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல் திருத்தச் சட்டமூலமும் எனும் தலைப்பில் செயலமர்வு ஒன்று இடம்பெறவுள்ளது.

ஜனநாயக உரிமைகளைக் காப்பதற்கான இயக்கத்தின் பணிப்பாளரும் பிரபல அரசியலமைப்புச் சட்ட வல்லுனருமான சட்டத்தரணி எஸ்.ஜி.புஞ்சிகேவா மேற்படி செயலமர்வில் பிரதான உரையை ஆற்றவுள்ளார்.

காலையும் மாலையும் இடம்பெறவுள்ள இச் செயலமர்வில் காலை 9.30 மணிக்கு அரசியலமைப்புப் பற்றியும் பிற்பகல் 2.30 மணிக்கு உள்ளூராட்சி சட்டத்திருத்தங்கள் பற்றியும் இடம்பெறவுள்ளது. உரைகளைத் தொடர்ந்து விரிவான கலந்துரையாடல்கள் இடம்பெற்று மக்கள் அபிப்பிராய அறிக்கை தயாரிக்கப்பட்டு பொருத்தமான இடங்களுக்கு அவை அனுப்பிவைக்கப்படும் என சிந்தனைக் கூட அமைப்பாளர் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் தெரிவிக்கின்றார். (ச)


**வேலை வாய்ப்பு**

கனடாவைத் தலைமையகமாகக் கொண்டு 120 நாடுகளில் வலையமைப்பைக் கொண்ட சர்வதேச நிறுவனத்தில் பல வேலைவாய்ப்புக்கள். 6 மாத கால முகாமைத்துவப் பயிற்சியின் பின் நிரந்தர வேலைவாய்ப்பு. கிளி., முல்லைத்தீவு மாவட்டத்தினருக்கு முன்னுரிமை வழங்கப்படும். தங்குமிட வசதியும் உண்டு.

தொடர்பு:- 021 4900001, 021 4900350

(3120)

செல்லா சினிமா (நாதன்ஸ்)




காட்சி நேரம்:- 10.30,2.30,6.30,9.30

**மனோதத்துவ வைத்தியம்**

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்

**Dr.P.ஆறுமுகம்**

T.P.: 0719315664 , 0777569205

**மீண்டும் யாழில்**

25.11.2010 முதல் 02.12.2010 வரை உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 250/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா ,மாதவிடாய்க் கோளாறுகள் ,வெள்ளை படுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு ,கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

கமால் ரூரிஸ் இன் (சிவதர்சன் எலெக்ரிக்கல்ஸ் அருகில்)
வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்குமிடையில்,
392, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.

(C-1668)

**31 ஆம் நாள் நினைவஞ்சலி**



மலர்வு 02 06 1938

உதிர்வு 26 10 2010

**அமரர் தில்லையம்பலம் பாலசிங்கம்**

அன்பை அள்ளித்து - எம்
வாழ்க்கையை ஒளியேற்றி வைத்தீர்களே!
அணையா தீபமாக எம் நெஞ்சில் - உங்கள்
நினைவுகள் என்றும் நிறைந்திருக்கும்
பாரினிலே உங்கள் பாசத்தை யாருமிங்கு
ஈடுசெய்ய முடியாது - எங்கள்
அன்பு தீபமே! நீங்கள் இறையடி சேர்ந்தீர்களே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

ஊறாலை மேற்கு,
ஊறாலை.

குடும்பத்தினர்

(3123)

## இன்று ஒரு தகவல்

# அவமானம்

வாழ்க்கையில் ஒரு சில சந்தர்ப்பங்களில் நாம் சில அவமானங்களை சந்தித்தே தீர வேண்டியிருக்கிறது. என்ன செய்வது? காலம் அப்படி!

அவமானப்படுபவர்கள் உடனே அடங்கிப்போய்விடுவது தான் உலக வழக்கம். அவமானப்பட்டால் உடனே சீறி எழுபவர்களும் உண்டு. ஆனால் அதையே ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு முன்னுக்கு வருபவர்களும் சில பேர் இருக்கின்றார்கள். அப்படியானவர்கள் மிக அபூர்வம்தான்.

இன்றைய மனோதத்துவ நிபுணர்கள் எல்லாம் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? அவமானப்பட்டுவிட்டால் உடனே அடங்கிப் போய்விடக்கூடாதாம். அதையே ஒரு சவாலாக எடுத்து கொண்டு மனதில் ஒரு வைராக்கியத்துடன் முயற்சி செய்தால் வாழ்க்கையில் எல்லோரும் முன்னேறலாம்.

'அவமானம்' என்பதை வைராக்கியமாக மாற்றவேண்டும். அதுதான் வெற்றிக்கு வழி!

"இராமர் இந்தப் பூமியில் பிறந்ததே ஒரு வைராக்கியத்தால் தான் சேர்" என்றார் ஒருத்தர்.

"அது எப்படி?" என்று கேட்டேன்.

அவர் சொன்னார் தசரதருக்கு இராமர் குழந்தையாக வந்து பிறக்க வேண்டும். அப்பொழுதுதான் இங்கே இருக்கும் கஷ்ட ங்கள் எல்லாம் நீங்கும், என்று சர்வலோகமும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. ஆனால் அவர் எப்பொழுது வந்து பிறப்பார் என்று யாருக்கும் தெரியவில்லை.

ஒரு நாள் நாரதர் தசரதரைத் தேடி வந்தார். "தசரதா ! உனக்கு ஒரு செய்தி தெரியுமா? என்று ஆரம்பித்தார்.

"என்ன விடயம்?" என்று கேட்டார் தசரதர்.

"தசரதா நீ அடிக்கடி உன்னுடைய தேரில் ஏறி தேவலோகத்துக்குப் போகிறாய்– வருகிறாய் எல்லாம் சரி! தேவலோகத்தில் உன்னை நல்லபடியாகத்தான் வரவேற்கிறார்கள். தேவேந்திரன் உன்னைப் பிரியமாய் அழைத்துக் கொண்டு பேோய் தன்னுடைய அரியாசனத்தில் தனக்குப் பக்கத்திலேயே உட்கார வைக்கின்றான். நீயும் சந்தோசமாக உட்கார்ந்து பேசிவிட்டு வந்துவிடுகிறாய். ஆனால், நீ இங்கே வந்தபின் அங்கே என்ன நடக்குது என்பது உனக்குத் தெரியுமா?" என்றார் நாரதர்.

"என்ன நடக்குது? எனக்கு ஒன்றும் தெரியவில்லையே?" என்றார் தசரதர்.

நாரதர் அருகில் வந்தார். மெதுவாக அவருடைய காதோடு காதாகச் சென்னார்: நீ அங்கே தேவேந்திரனிடம் உட்கார்ந்து பேசிவிட்டு வந்தபின் நீ அங்கே உட்கார்ந்திருந்த அரியாசனத்தை தண்ணீர் ஊற்றி கழுவி விடுகிறார்கள். நீ என்ன அந்தளவுக்கு சுத்தமில்லாதவனா?" என்றார். தசரதருக்கு பெருத்த அவமானமாகி விட்டது.

"அப்படியா செய்கிறார்கள்?" என்றார். "ஆமாம் நீ வேண்டுமானால் நான் சொல்வது உண்மையா இல்லையா என்று சோதித்துப் பார்த்துக் கொள்" என்றார் நாரதர்.

உடனே தசரதர் இதற்காகவே புறப்பட்டு தேவலோகம் போனார். அங்கே வழக்கம்போல இவரைக் கூப்பிட்டு உட்கார வைத்து பேசிக் கொண்டிருந்தான் தேவேந்திரன். கொஞ்ச நேரம் பேசிக் கொண்டு இருந்துவிட்டு, "சரி, நான் கிழம்புகிறேன்" என்று புறப்பட்டார் தசரதர். அவனும் வாசல் வரைவந்து வழியனுப்பி வைத்துவிட்டு உள்ளே போனான்.

தசரதர் வெளியே மறைந்திருந்துவிட்டு மெதுவாக உள்ளே எட்டிப்பார்த்தார்.

நாரதர் சொன்னது சரிதான். தசரதர் இருந்த ஆசனத்தை இரண்டு தேவர்கள் கழுவிச் சுத்தப்படுத்தி கொண்டிருந்தார்கள்.

தசரதரால் இதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவருக்கு பெருத்த அவமானமாகிவிட்டது. நேராக கிடுகிடு வென்று தேவேந்திரனிடம் சென்றார்.

"நான் உட்கார்ந்திருந்த இருக்கையை சுத்தம் செய்கிறாயே ... நான் என்ன அந்தளவுக்கு பாவியா?" என்று கேட்டார்.

"தசரதரே! மனிதனுக்கு 3 கடன்கள் உண்டு. ஒன்று தேவகடன், இன்னொன்று ரிஷிகடன், மூன்றாவது பித்ருகடன். இதைத் தீர்க்காதவன் பாவியாகின்றான். இதில் மகனை பெறுவதால் தான் பித்ருகடன் தீரும். உனக்கு மகனில்லை. அதனால் நீ பாவியாகிறாய். பாவி உட்கார்ந்திருந்த இடம் என்பதனால் அதை சுத்தம் செய்ய வேண்டியது எங்கள் கடமை" என்றான் தேவேந்திரன். இந்த இடத்தில் தசரதருக்கு ஏற்பட்ட அவமானம் வைராக்கி யமாக மாறியது.

"தேவேந்திரரே! கேட்டுக் கொள்ளுங்கள் ஒரு மகனைப் பெற்ற பின்தான் இந்தச்சபையில் மறுபடியும் அடி வைப்பேன்" என்று சொல்லி விட்டு போய்விட்டார். போய் புத்ர காமோஷ்டி யாகம் செய்தார். புத்திரர்கள் பிறந்தார்கள்.

இந்தக் கதையிலுள்ள கருத்து என்னவென்றால்...

தேவேந்திரன் தசரதரை அவமானப்படுத்தியிருக்காவிட்டால் அவருக்கு இப்படி ஒரு வைராக்கியம் பிறந்திருக்குமா?

யோசித்துப் பாருங்கள் ! நமக்கு ஏற்படும் சில அவமானங்களையும் வைராக்கியமாக மாற்றிக் கொள்ளுவோம். வாழ்க்கையில் முன்னேறுவோம். நம்முடைய ஆட்கள் சிலர் அவமானத்தை வைராக்கியமாக மாற்றுவது எப்படித் தெரியுமா?என்னிடம் ஒரு பையன் சொன்னான்:

"என்னுடைய அப்பா என்னை எல்லோருக்கும் முன்னால் வைத்து திட்டிவிட்டார். பொறுப்பில்லாமல் ஊர் சுற்றுகிறாய் என்று சொல்லி அவமானப்படுத்திவிட்டார். இனிமேல் நீ என்முகத்திலேயே முழிக்காதேடா போடா என்றுவேறு சொல்லி விட்டார். எனக்கு ரோஷம் வந்துவிட்டது. அந்த அவமானத்தை வைராக்கியமாக மாற்றிக் கொண்டேன். அன்றிலிருந்து அவருடைய முகத்தில் முழிப்பதில்லை" என்றான்.

"அப்படியா என்றேன்"

ஆமாம் அவர் வீட்டில் இல்லாத சமயம் பார்த்து சமையல் கட்டுக்குப் போய் சாப்பிட்டுவிட்டு நைசாக வெளியில் வந்துவிடுவேன் என்றான்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பகல் வேளையில் வீடுபுகுந்து 26 பவுண் நகைகள், கைத்தொலைபேசி கொள்ளை

## கைதடியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கைதடி வடக்கில் வாடகை வீடொன்றில் தங்கியிருந்த அரச ஊழியர்களாக கடமையாற்றும் குடும்பமொன்றின் வீட்டிலிருந்து பல இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளும் கைத்தொலைபேசி ஒன்றும் களவாடப்பட்டுள்ளது. இச்சம்பவம் நேற்று முந்தினம் பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

கடமைக்கு சென்று வீடுதிரும்பிய அரச ஊழியர் வீட்டினுள் நுழைந்த போது வீட்டின் பின் கதவு உடைக்கப்பட்டு பொருட்கள் களவாடப்பட்டிருந்தன. இதில் 26 பவுண் நகைகளும் 60 ஆயிரம் பெறுமதியான கைத்தொலைபேசியும் களவாடப் பட்டதைக் கண்டு அதிர்ச்சி யடைந்தார். இச்சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு அறி விக்கப்பட்டதையடுத்து கைரேகை நிபுணர்களுடன் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொ ண்டனர். இதன் போது சந்தேகத் தின் பேரில் வீட்டின் உரிமையாளரும் இச்சம்பவத்தோடு தொடர்புடை யவர்களும் விசாரணைக்கு உட்ப டுத்தப் பட்டனர்.

இவ்விடயத்தில் பொலிஸாரும் இராணுவத்தினரும் தீவிரமாகச் செயற்பட்டு வருவதாக தெரியவருகின்றது. (ஸ்ரீ-2)

# சைவப்புலவர் தேர்வுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் நடத்தும் இளம் சைவப் புலவர், சைவப்புலவர் தேர்வுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

இதற்கு விண்ணப்பிப்போர் சைவப்புலவர், மு.திருஞான சம்பந் தபிள்ளை, இல 153 , காங்கேசன்துறைவீதி, கொக்குவில் எனும் முகவரியுடனோ அல்லது வேறு சைவப்புலவர்களிடமோ விண்ணப்பப் படிவங்களைப் பெற்று அதனைப் பூர்த்திசெய்து எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கலாமென சைவப்புலவர் சங்க செயலாளர் செ.கந்தசத்தியதாசன் கேட்டுள்ளார். தேர்வுகள் யாவும் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் யாழ்ப்பாணம், கிளிநொச்சி,வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு , கண்டி ஆகிய இடங்களிலும் ஜெர்மனி, லண்டன், கனடா , சுவிஸர்லாந்து ஆகிய நாடுகளிலும் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-2)

## இராசி பலன்

*25.11.2010*
*(கார்த்திகை 9,வியாழக்கிழமை)*
*சதுர்த்தி முன்னிரவு 8.50 மணிவரை*
*திருவாதிரைமுற்பகல் 8.47 மணிவரை*
*இராகுகாலம்-1.42-3.12 மணிவரை*
*சுபநேரம்-7.42-9.12 மணிவரை*
*சங்கடகர் சதுர்த்தி விரதம்*

**மேடம்** சகோதரர்களின் ஒத்துழைப்பால் நல்ல காரியம் ஒன்று நடைபெறலாம், குடும்பத்தில், குதூகலமான சூழ்நிலை அமையும், பொருட்சேர்க்கையுண்டு.

**இடபம்** தொலைபேசி வழித்தகவல் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணைபுரியும்,சுபகாரியப்பேச்சுக்கள் முடிவாகலாம், வாக்கு மேன்மையுண்டு

**மிதுனம்** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் செலவு ஏற்படலாம், வியாபார முயற்சிக்காக பாடுபடுவீர்கள், சிந்தனை மிகுதியுண்டு.

**கடகம்** பணத்தை கண்டபாட்டில் செலவு செய்வீர்கள், மாற்றங்களால் ஏற்றம் உருவாகலாம், தொலைபேசித் தகவலால் உற்சாகம் அடைவீர்கள்.

**சிங்கம்** இலத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான அறிகுறிதோன்றும்,பெருமையான நாள், பணவரவு அதிகரிக்கும், தொழில் உயர்வுண்டு.

**கன்னி** புதிய திட்டங்களைத்தீட்டி இலாபம் உழைக்க நினைப்பீர்கள், ஆரோக்கியம் அதிகரிக்கும், நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர். புதிய தகவல் வந்துசேரும்.

**துலாம்** தந்தை வழியில் மனநிறைவான செய்தி யொன்று வந்து சேரும், பொருளாதார நிலை உயரும், வெளியூர்ப் பயணங்களால் ஆதாயம் ஏற்படும்.

**விருச்சிகம்** எதிர்பாராத அச்சமுண்டு, மன உளைச்சல் ஏற்படலாம், போசன சுகமுண்டு, பிறருக்கு உதவி செய்யும் நிலை உருவாகும், தொழிலில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள்.

**தனுசு** பொருட்சேர்க்கையுண்டு, நண்பர்கள் சந்திப்புண்டு,குடும்பத்தேவைகள் பூர்த்தியாகும்,தேகநலன் சீராகும், செல்வாக்கான நாள்.

**மகரம்** வங்கிச் சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், செய்தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், சுபநிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும்.

**கும்பம்** பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்துகொள்வீர்கள், பூமி சம்பந்தப்பட்ட வகையில் கணிசமான இலாபம் வந்து சேரும், புதிய பொருட்சேர்க்கையுண்டு.

**மீனம்** புதிய நபர்களின் சந்திப்பால் பொருளாதார நிலை உயரும், தொலைபேசி மூலம் பொன்னான செய்தி வந்து சேரும், வாகனயோகமுண்டு, சுபகாரியச் செலவுண்டு.

வளவன்

# அரச ஊழியர்கள்,ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வடமாகான இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் தொழில் சங்க மகா சம்மேளனத்தின் அனுசரணையுடன் வடக்கு மாகாண அரச ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும் அவற்றுக்கான தீர்வுகளும் தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலுக்கு இலங்கை ஆசிரியர் சங்கம், அரச தாதியர் சங்கம்,தபால், தொலைத்தொடர்புகள் சங்கம், முகாமைத்துவ உதவியாளர் சங்கம், பொதுச்சுகாதார உத்தியோகத்தர் சங்கம்,காப்புறுதி கூட்டுத்தாபன ஊழியர் சங்கம் மற்றும் புகையிரத திணைக்கள ஊழியர் சங்கம் பங்கேற்கவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் யோசப் ஸ்ராலின் அறிவித்துள்ளார்.

✦ ✦ ✦

வடமாகாண ஆசிரியர் சங்கத்தினால் வடமாகாண ஆசிரியர்கள் எதிர்நோக்கும் இடமாற்றம், சம்பள உயர்வு, பதவியுயர்வு உள்ளிட்ட பிரச்சினைகளும் அவற்றிற்கான தீர்வுகளும் பற்றிய விடயம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 10 மணிக்கு யா/வைதீஸ்வராக் கல்லூரியில் இலங்கை ஆசிரியர்சங்க பொதுச்செயலாளர் யோசப் ஸ்ராலின் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 70 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 60 | 100 | 70 |
| தக்காளி | 100 | 100 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 |
| கோவா | 50 | 70 | 70 |
| கரட் | 60 | 80 | 80 |
| பூசணி | 50 | 40 | 50 |
| புடோல் | 40 | 50 | 50 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 130 | 130 | 130 |
| பெரிய வெங்காயம் | 110 | 120 | 90 |
| பாகற்காய் | 140 | 140 | 150 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 50 |
| கருணைக் கிழங்கு | 40 | 50 | 60 |
| பயற்றங்காய் | 100 | 120 | 170 |
| லீக்ஸ் | 100 | 120 | 130 |
| பீற்றூட் | 70 | 70 | 120 |
| கறிமிளகாய் | 100 | 160 | 130 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 180 |
| போஞ்சி | 100 | 120 | 130 |
| கத்தரிதம்புள்ள | 60 | 80 | 50 |
| கீரை - 1 பிடி | 15 | 30 | 25 |
| தேசிக்காய் | 100 | 120 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 40 |

# உள்நாட்டு நிறுவனங்கள் தடையின்றி வெளிநாட்டு நிதியைப் பெற அனுமதி

## மத்திய வங்கி தீர்மானம்

(கொழும்பு)

உள்நாட்டு நிறுவனங்கள் தடையின்றி வெளிநாட்டு நிதியைப் பெற்றுக்கொள்ள மத்திய வங்கி அனுமதி வழங்கியுள்ளது. இதற்கான தீர்மானம் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்டதுடன் இது இலங்கையின் நிதிச் சந்தை வரலாற்றில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எதிர்வரும் 2011 இற்கான வரவு-செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்வைத்த வெளிநாட்டு நிதிப் பரிமாற்றம் தொடர்பான ஆலோசனைகளே இத் தீர்மானத்திற்கு வழிவகுத்துள்ளதாகவும் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

நாட்டில் பல்வேறு வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் தமது வர்த்தகத்தை விரிவாக்குவதற்கான நிதித் தேவையைக் கொண்டுள்ளன. அதற்கான நிதியைப் பெற்றுக்கொள்ள விரும்பும் வர்த்தகர்கள் உள்ளூர் நிதியிலிருந்தே அதனைப்பெற்றுக்கொள்ள விளைவதால் தேசிய நிதி நிலையில் அழுத்தங்கள் ஏற்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அநாவசியமான அழுத்தத்தினை சரிசெய்வதற்கும் வர்த்தக நிறுவனங்களிற்கான நிவாரணமாகவும் இத்தீர்மானத்தை மேற்கொண்டதாகத் தெரிவித்த அவர், நிறுவனங்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக அமையும் எனவும் தெரிவித்தார்.

மத்திய வங்கி ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் மாநாடொன்று நேற்றுமுன்தினம் மத்திய வங்கி தலைமையக கேட்போர்கூடத்தில் நடைபெற்றது. இதுதொடர்பில் விளக்கமளித்த ஆளுநர் மேலும் தெரிவிக்கையில், எவ்வித தாமதங்களுமின்றி வெளிநாட்டு முதலீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கு நிதிக் கட்டுப்பாட்டு திணைக்களத்தில் தனியான பிரிவு ஒன்று ஏற்படுத்தப்படவுள்ளது.

அதேவேளை இந் நாட்டு நிதி கொடுக்கல் வாங்கல்களை இலகுபடுத்தும் நோக்கில் ஒன்பது புதிய தீர்மானங்களை மத்திய வங்கி மேற்கொண்டுள்ளது.

இதில் ஏழுமுக்கிய தீர்மானங்கள் நேற்று முன்தினம் முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளன. இலங்கையை வதிவிடமாகக் கொண்ட ஒரு தனிநபர் ஒருங்கிணைந்த அல்லது ஒருங்கிணைக்கப்படாத நிறுவனங்களுக்கு வெளிநாட்டு நிறுவனங்களின் பங்குகளை முதலீடு செய்வதற்கும் இங்குள்ள காப்புறுதி நிறுவனங்கள் வெளிநாடுகளில் தமது வளங்களின் ஒரு பகுதியை முதலீடு செய்வதற்கும் மத்திய வங்கி அனுமதி வழங்கியுள்ளது.

இத் தீர்மானம் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரவுள்ளது. அத்துடன் வெளிநாட்டு நிறுவனங்கள் இலங்கைக்குள் வர்த்தக நிறுவனங்களை ஆரம்பிப்பது உட்பட மேலும் 6 தீர்மானங்கள் நேற்றுமுன்தினம் முதல் நடைமுறைக்கு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# ஆன்மீக சொற்பொழிவு

(மருதங்கேணி)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை "வீடு புனைய முன்னே காத்தருளே!' என்னும் விடயம் பற்றி செஞ்சொற்செம்மல் இரா.கேதீசன் ஆன்மீக சொற்பொழிவாற்றுவார். (ஸ்ரீ-35)

# தம்மை நிரந்தரமாக்குமாறு தொண்டர் சேவையினர் கோரிக்கை

(கொழும்பு)

முல்லைத்தீவு வைத்தியசாலையில் நீண்டகாலமாக தொண்டர் அடிப்படையில் சேவையாற்றியவர்கள் தங்களை நிரந்தரமாக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

அப்பகுதியில் ஏற்பட்ட யுத்தத்தின்போது அச்சத்தின் மத்தியில் துணிச்சலாக சேவையாற்றிய தொண்டர் சேவையினரே தம்மை நிரந்தரமாக்குமாறு கோரியுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளில் ஆளணிப் பற்றாக்குறை இருப்பதாகவும் தம்மை நிரந்தரமாக்கி அவ் வெற்றிடங்களுக்கு நியமிக்குமாறும் அவர்களது கோரிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-10)

# வடிகால்களில் மழைநீர் தேங்கி போக்குவரத்துக்கு இடையூறு

(கிளிநொச்சி)

பருவகாலமழை பரவலாகப் பெய்து வருகின்ற நிலையில் வன்னிப் பகுதியில் உள்ள வீதிகளின் இருகரையிலும் காணப்படும் வடிகால்களில் மழைநீர் தேங்கி நின்று வீதியினை ஊடறுத்துப் பாய்கிறது.

பொதுமக்களால் தாவரக் கழிவுகளும் பிளாஸ்ரிக் கழிவுப் பொருட்களும் வீதியோர வடிகால்களினுள் போடப்படுவதனாலேயே இவ்வாறு மழைநீர் தேங்குவதனையும் வீதியினை ஊடறுத்துப் பாய்வதனையும் காணக் கூடியதாக உள் ளது.

எனவே பொதுமக்கள் இவ் விடயத்தில் சமூக சிந்தனையுடன் செயற்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (ஸ்ரீ)

# நாவலர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் வண்ணார்பண்ணை நாவலர் மகாவித்தியாலயத்துடன் இணைந்து நடாத்தும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 10 மணிக்கு அபிஷேகம், பூசை ஆகியவற்றுடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளையின் வாழ்த்துரையும் இளம் சைவப்புலவர் சரோஜினிதேவி சிவஞானத்தின் கதாப்பிரசங்கமும் இடம் பெறவுள்ளது.

அத்துடன் யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே வினாடி வினாப் போட்டியும் இடம்பெற்று பரிசுகளும் வழங்கப்படும். (ஸ்ரீ-2)

# இலங்கை தமிழர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்பட வேண்டும்

## கிருஷ்ணாவுக்கு கலைஞர் கடிதம்



இலங்கை தமிழர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அந்நாட்டு முகாம்களில் உள்ள 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்களை சொந்த இடங்களில் குடியமர்த்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவுக்கு தமிழக முதல்வர் கருணாநிதி கடிதம் ஒன்றை வரைந்துள்ளார்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா இன்று இலங்கை வரவுள்ள நிலையில் இலங்கை தமிழர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அக்கடித்தத்தில் முதல்வர் கருணாநிதி குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,

இந்திய வெளியுறவுத்துறை செயலாளர் நிருபமராவ் அண்மையில் இலங்கைக்கு வந்த போது முகாம்களில் இன்னமும் 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த செய்தி வேதனையை அளிக்கிறது. முகாம்களில் உள்ள தமிழர்களை அவர்களது சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்ல அனுமதிப்பது தொடர்பாக பலமுறை வலியுறுத்தியும் இதுவரை உரிய நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

போரினால் பாதிக்கப்பட்ட மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழர்களில் பெரும்பாலானோர் சொந்த இடத்திற்கு செல்ல அனுமதிக்கப்பட்ட போதிலும் மறுவாழ்வுப் பணிகள் மறுகுடியமர்வுப் பணிகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படவில்லை என்று அறிகிறேன்.

சொந்த நாட்டிலேயே அகதிகளாக வாழும் அவல நிலைக்கு ஆளாகி சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வரும் இலங்கைத் தமிழர்களின் துயர்களைவதற்கு இலங்கை அரசு உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு மத்திய அரசு வலியுறுத்த வேண்டும்.

மத்திய அரசின் நிதியுதவியுடன் இலங்கையில் கட்டப்பட்டுவரும் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகளைக் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க வேண்டும்.

அதற்கான நடவடிக் கைகளை இலங்கை அரசு மேற்கொள்ள வேண்டும். இலங்கைத் தமிழர்களின் பிரச் சினைக்கு அரசியல் தீர்வும் அதிகாரப்பகிர்வும் கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கை இன்னமும் தொடக்க நிலையிலேயே இருக்கிறது.

எனவே இலங்கைத் தமிழர்கள் சம உரிமையுடனும் கண்ணியத்துடனும் வாழ வேண்டும். இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வும் காணப்பட வேண்டும் என எஸ்.எம்.கிருஷ்ணாவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் முதல்வர் கருணாநிதி கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

# விஜயகாந்துக்கு டாக்டர் பட்டம் அமெரிக்க பல்கலை. வழங்குகிறது



(பெரம்பூர்)

சிறந்த சமூக சேவை ஆற்றியதற்காக விஜயகாந்துக்கு அமெரிக்க பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் வழங்குகிறது.

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள ஐ.ஐ.சி.எம். என்ற பல்கலைக் கழகம் சிறந்த சமூகசேவை செய்தவர்களுக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கவுள்ளது.

இந்த ஆண்டுக்கான சிறப்பு டாக்டர் பட்டத்தை தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்துக்கு வழங்க இப்பல்கலைக்கழகம் முடிவு செய்துள்ளது. இதற்கான அறிவிப்பை நிர்வாகிகள் கடந்த 22ஆம் தகதி வெளியிட்டுள்ளனர்.

பாக்ர் பட்டம்வழங்கும்விழாவைசென்னை சேத்துப்பட்டில் உள்ள தனியார் பள்ளி மைதானத்தில் எதிர்வரும் டிசம்பர் மாதம் 3ஆம் திகதி நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான அழைப்பிதழ் அச்சடிப்பு, நிகழ்ச்சி ஏற்பாடு, டிஜிட்டல் பேனர்கள் அமைத்தல் உள்ளிட்ட பல பணிகளில் தே.மு.தி.க.மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் செய்து வருகின்றனர். (ஸ்ரீ-2)

# பாடசாலையின் புனரமைப்புக்கு மாநகரசபை உறுப்பினர் நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை உறுப்பினர் எஸ். விஜயகாந் இவ் வருட அபிவிருத்திக்காக தனது நிதி ஒதுக்கீட்டில் இருந்து மூன்று இலட்சம் ரூபாவை யாழ்ப்பாணம் திருநகர் தியோகு பாலர் பாடசாலையின் புனரமைப்புக்கென வழங்கியுள்ளார்.

மேற்படி பாடசாலையில் 70 சிறுவர்கள் கல்வி கற்று வருவதுடன் அங்கு எவ்வித அத்தியாவசிய அடிப்படை வசதிகளும் இல்லாத நிலையில் சிறுவர்கள் ஆரம்பக் கல்வியை கற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# இனங்காணப்பட்ட மோட்டார் வாகனங்கள் கையளிப்பு

(கிளிநொச்சி)

கடந்த வருடம் வன்னியில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது கைவிடப்பட்ட வாகனங்களில் 2ஆயிரம் மோட்டார் சைக்கிள்களும் 300 ஏனைய வாகனங்களும் இனங்காணப்பட்டுள்ளதாகவும் எதிர் வரும் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதிக்கு முன் இவற்றை பெற்றுக் கொள்ளுமாறும் கிளிநொச்சி அரச அதிபர் திருமதி. றூபவதி கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 22,23,24 ஆம் திகதிகளின் மோட்டார் திணைக்கள பரிசோதகர்களால் பரிசோதிக்கப்பட்ட வாகனங்களில் 2ஆயிரம் மோட்டார் சைக்கிள்களும் 300 ஏனைய வாகனங்களும் இனங்காணப்பட்டுள்ளன. இதில் 324 மோட்டார் சைக்கிள்களுக்குமான உரிமையாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

எனவே இவ்வாகனங்களின் வாகன விபரம் இணைக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் டிசம்பர் மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் வாகன பதிவு புத்தகம், பொலிஸ் முறைப்பாட்டு பிரதி, கிராம அலுவலர் உறுதிப்படுத்திய இரு அடையாள அட்டைப் பிரதி, வரி அறவீட்டுப் படிவ பிரதி ஆகிய ஆவணங்களை ஒப்படைத்து மேற்படி வாகனங்களை பெற்றுக்கொள்ளமாறு அறிவித்துள்ளார். வாகனங்களின் விபரம் வருமாறு,

JK-5459,149-8592,NPMI-6717,89-6387,GN-1143,132-2127,GF-9507,136-2145,148-9763,NPJA-5777,HT-5198,NPGQ-8895,JD-1834,NPHY-1963,HK-4140,NPJU-9727,NPHT-4946,MB-9358,HJ-4220,MG-4768,GS-4469,NPHO-4116,81-1423,NPHG-0590,NPHE-7346,MB-8194,NPHE-2108,139-5699,158-4369,157-5037,502-0612,157-7619,HK-4163,JN-3726,502-0504,500-9236,NPGS-6478,500-7825,JG-4103,144-5525,NPMJ-1553, NPUB-0173,GN-1161,NPMQ-6652,NPMH-8511,NPMX-3486,GU-9174,NPGJ-4666,500-1775,GM-0597,NPHY-7414, NPMM-9127, NPMB-0438, NPMH-5846, NPJT-6809, NPJX-4868, NPJJ-6745,NPHZ-4963, JD-1854, MC-8188, NPHP-0808, 502-0598,NPGN-6631, NPJS-3200, NPGM-0601, 152-9509,151-5760, 147-5831,140-5769,140-7336,131-8452,143-2031,138-6335,131-4179, 113-6584,144-0201,148-0952,500-9340,142-5259,GO-6338,NPHM-2257,WPMR-4222,NPHU-4677,HC-2346, NPHU-0368,NPJV-0070,JU-9545,NPJK-0703,NPGO-6066, NPJY-6141,NEHI-6410,GY-6767, EPMC-0224,NPJS-2935, 133-0386, NPMF-3546,MF-7803,NPJW-1965, HQ-7526,MV-2249,MA-9006,NPHG-1510,HO-2368,JU-7558,GR-2483,153-4018,NPJR-7454,NPHM-0833,NPMR-2259,JO-3142,NPJY-8606,NPHO-9534,NPJW-8690,NPMQ-6557, MM-4096,NPJR-2285,JS-7498, NPGS-4317,NPGT-5148,NPHO-3983,HX-4338,NPJO-9711,GX-5901,NPMS-6172,NPJT-9928,MC-3006,NPHM-9326,NPMS-6177, HW-4131,HI-6626,GH-2006,GS-6902,GJ-9153, ME -4773, 112-5352, 156-0561, GN-4248, HW-2374, NPMW-8528,MH-8317,GO-5270, 115-8908, NPHO-6092, 103-9608, MV-8205, GF-6338, ME-3576, HW-1599, JZ-2988,JE-6361,144-0290, GP-2823,119-3517, 147-8479, 103-2330, HD-6483, 153- 4019, JQ-1179, ME-6519, HM-1088, 102-4198, MQ-3556, 119- 7633, UB-0288, HZ-0190, GL-4566, HT-9306, 112-4579, 500-6558, 151-5194,HM-9033,

UB-0282, 133-3437, MB-7793, HY-4714, MP-8213, 122-1331, JQ-8313,FW-2234, 129-4386, MD-1536, JD-0142,GV-3943, HA-5297, GP-4401, JN-8261, JC-7151, JP-0066, 502-0278, HS-6257, HW-9381,HL-1673,HI-6626, MG-9579, HM-1097, JW-1209, 149-1529, 148-6926,143-5367, NPGS-4185,ME-8217, JK- 5659, 111-4667, GZ-6081, 151-1520, T13-6064, 500-9637, 147-8647,

NPHY-5596, MO-5279, 500-4312, NPGS-6855, NPHM -9160, NPGC-6497,NPHC-3500, GQ-1041, GL-3536, HT-5227, 114-4502, GL-0423, JT-9831, 86-0768, NPGW-3399, 146-2115, TU-1638, 142-1197, HQ-7563, HC-3291, HL-3117, 138-3932, JL-0943, HZ-2816, ML-7038, 502-0672,113-0373, NPJZ-9244, HE-8435, HL-5852, GI-8540, 141-6487, JC-9874,HU-1443, JN-7757, 500-1443, HZ-0143,

500-9614, 502-0204, ME-3564, HA-6770, JV-9259,JY-8561, NPJR-7852, MA-5706, JH-6140, MV-0987, JB-4796, MQ-6695, MQ-6525, NPJK-1140, 134-9082, TS-7951,GT-5135, HC-2205,JG-1916, GN-9762,HI-6582, JH-0230,MK-9808, JI-9678,159-2610,GO-8536, HP-9054, NPHP-9364,HI-6569, GQ-8673,128-7619, 124-3653, GS-9105,GR-9170,HE-3745, MX-2156, MB-2213,148-0402, GM-0610, 147-5642,GU-5781, JD-6270,104-0595, MH-1759,

JP-3170,143-6570, 139-0679, GZ-4805,MD-4615,HK-4362, 136-8479, 156-6393,HT-3738,JQ-1436, HJ-2721.

(ஸ்ரீ)

### அடுத்த வருடம் முதல்

# பல்கலைக்கழகப் பரீட்சைகள் அனைத்தும் ஆங்கிலமொழியில்!

## உயர்கல்வி அமைச்சர் அறிவிப்பு



பல்கலைக்கழகங்களில் அனைத்து பரீட்சைகளும் அடுத்த ஆண்டு தொடக்கம் ஆங்கில மொழிமூலம் நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் உரைநிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மைக் காலங்களில் பல்கலைக் கழகங்களில் ஒழுக்கத்திலும் கல்விசார் நடவடிக்கைகளிலும் வீழ்ச்சி காணப்பட்டுள்ளது. அனைத்து பல்கலைக்கழகங்களிலும் ஆங்கில மொழி மையங்களை நிறுவ நடவடிக்கை எடுக்கப் படுகின்றன. மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளைத் தகுந்த மனோநிலையில் மேற்கொள்வதற்கு வசதி யளிப்பதே இதன் நோக்கமாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

(ஸ்ரீ)

### கொழும்பு தேசிய வைத்தியசாலையில்

# சிறுநீரக கற்களை கரைக்க X–கதிர்களின் மூலம் சிகிச்சை

(கொழும்பு)

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிறுநீரகங்களில் உண்டாகும் கற்களை எக்ஸ் கதிர்களின் மூலம் கரைக்கக் கூடியதான நவீன தொழில்நுட்ப வடிவமைப்பிலான கருவி பொருத்தப்பட்டுள்ளது.

இதுவரை வயிற்றின் மூலம் செய்யப் படும் சத்திரசிகிச்சை வாயிலாகவே கற்கள் நீக்கப்பட்டு வந்ததுடன் பல தடவைகள் இந்த சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த புதிய கருவி கற்கள் உள்ள இடங்களைக் கண்டு பிடித்து அந்த இடங்களுக்கு எக்ஸ் கதிர்களை செலுத்தும் விசேட தன்மையைக் கொண்டுள்ளது. அரை மணி நேரத்துக்குள் சத்திர சிகிச்சையை மேற்கொள்ள முடியும்.

தனியார் வைத்தியசாலையில் இந்த சத்திரசிகிச்சையை மேற்கொள்வதற்கு நோயாளிக்கு 35 ஆயிரம் ரூபா செலவாகும். சாதாரண சிகிச்சைக்கு 4 இலட்சம் ரூபா செலவாகும். அரசாங்கம் இந்த சத்திர சிகிச்சையை இலவசமாக மேற்கொள்கின்றமை குறிப்பிடத் தக்கது.

(ஸ்ரீ)


## மன மகிழ்வுடன் நன்றி கூறுகின்றோம்



பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கௌரவ K.N. டக்ளஸ் தேவானந்தா யாழ்ப்பாணம் சமுர்த்தி மகாசங்க சமூக அபிவிருத்தி மன்ற வசதி குறைந்த மாணவர்களுக்கு கல்விப் புலமைப் பரிசில் வழங்குவதற்கு தமது நிதியூடாக மாதாந்தம் 500/= வீதம் 101 மாணவர்களுக்கு வழங்குவதற்கு மன முவந்து நிதி உதவி அளித்து அந்நிகழ்வில் பிரதம விருந்தினராகவும் கலந்து சிறப்பித்து மாணவர்களுக்கு நிதி உதவியை வழங்கி கௌரவித்தமைக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றம்,
சமுர்த்தி மகாசங்கம்,
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்.

(சி-1667)


# அமைச்சுகளுக்கான செயலாளர்கள் இதயசுத்தியுடன் பணியாற்ற வேண்டும்

## ஜனாதிபதி தெரிவிப்பு



அமைச்சுகளுக்கான புதிய செயலாளர்கள் இதய சுத்தியுடன் மக்களுக்கு பணியாற்றவேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார்.

அமைச்சுகளுக்கு நியமிக்கப் பட்டுள்ள செயலாளர்களுக்கான நியமனக் கடிதங்களை நேற்று முன் தினம் கையளித்து உரையாற்றிய போதே அவர் இவ்வாறு அறிவுரை வழங்கினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமது பதவியினை கதிரை யுடன் மட்டுப்படுத்தாது செயற்பாட்டு ரீதியில் இதய சுத்தியுடன் மக்களுக்கு பணியாற்றுவதுடன் மக்களின் எதிர் பார்ப்புக்களை நிறைவேற்ற அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

அத்துடன் அந்தந்த அமைச்சுகளுக்கு பொதுமக்கள் அனுப்பும் தமது பிரச்சினைகள் பற்றிய கடிதங்களுக்கு கட்டாயம் பதிலளிக்க வேண்டும்.

அதனை குறித்த அமைச்சின் செயலாளர் தனிப்பட்ட முறையில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் அனைத்து அமைச்சுகளும் மஹிந்த சிந்தனை தொலை நோக்கின் பணிகளை மேற்கொள்வதுடன் அதன் பிரகாரம் மக்களுக்கு பணியாற்ற வேண்டுமெனவும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)







யாழ்.மாநகரசபை தீயணைப்புப் பிரிவின் தலைவர் எஸ். ஆனந்தராஜாவின் பிரிவுபசார நிகழ்வு நேற்று யாழ். மாநகர சபை தீயணைப்பு அலுவலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்.மாநகர சபை ஆணையாளர் மு.செ. சரவணபவ மற்றும் விழா நாயகன் ஆகியோர் உரையாற்றுவதையும் யாழ். மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராஜா விழாநாயகனுக்கு நினைவுப் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-எஸ்.கரன்)

# கரவெட்டி பி.செ.பிரிவில் ஐந்தாம் கட்ட வீட்டுத் திட்டத்திற்கு 363 குடும்பங்கள் தெரிவு

(கரவெட்டி)

உலக வங்கியின் நிதி உதவியுடன் வடக்கு -கிழக்கு வீடமைப்பு மீள்நிர்மாண திட்டத்தின் கீழ் கடந்த 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதிக்குள் 50 ஆயிரத்து 91 வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

இத் திட்டத்தின் கீழ் தற்போது 40 ஆயிரம் வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளதுடன் இதற்கு யுத்தத்தினால் வீடுகளை இழந்த நலிவுற்ற குடும்பங்களில் இருந்து பயனாளிகள் தெரிவு செய்யப்படுகின்றன என்று கரவெட்டி பிரதேச செயலக திட்டப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.கடந்த சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு பிர்தேச செயலக மண்டபத்தில் இடம்பெற்ற பயனாளிகளுக்கான பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டபோது அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கரவெட்டிப் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள சொந்தக் காணிகளில் வீடுகள் இல்லாத வறிய மக்களுக்கான வீட்டுத் திட்டத்தில் 5ஆம் கட்டத்திற்கு 363 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் 2011ஆம் ஆண்டு யூன் மாதத்திற்கு முன் தமது வீடுகளைக் கட்டி முடிக்க வேண்டும். நன்கொடையாக 3இலட்சத்து 25 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

வீடுகட்டும் போது பயனாளிகள் பல சிரமங்களையும் எதிர்கொள்ள நேரிடும்.எனவே பயனாளிகள் அனைவரும் தமது வீட்டுக் கட்டுமானப் பணிகளைத் துரிதமாக மேற்கொள்ள வேண்டும் என்றும் பயனாளிகளுக்கு ஏற்படும் சிரமங்களைத் தவிர்ப்பதற்கு மற்றும் ஆலோசனை பெறுவதற்கும் தொலைபேசி இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

திட்டப் பணிப்பாளர் 026 222 7537, திட்ட அலுவலகம் சமூக அபிவிருத்தி நிபுணர் -026 222 7536, பொறியியலாளர் நிபுணர் -026 5670642, திட்டக் கணக்காளர் -026 3200256, தகவல் கல்வித் தொடர்பாடல் ஆலோசகர் -026 3200255 ஆகிய உயரதிகாரிகளின் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பயனாளிகளுக்கு ஏற்படும் சிரமங்களை தவிர்க்க முடியும் என்று அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-24)

# வாள் வெட்டுக்கு இலக்கான இளைஞன் மந்திகை வைத்தியசாலையில் அனுமதி

(கரவெட்டி)

வாகன கொடுக்கல் வாங்கல் தொடர்பில் ஏற்பட்ட தகராறில் வல்லிபுர குறிச்சி பகுதியில் மூன்று பேர் கொண்ட இளைஞர் குழுவால் அப்பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவன் பலத்த வாள் வெட்டுக்கு இலக்காகியுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம் பெற்றுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக இருதரப்பினருக்கும் இடையில் அடிக்கடி வாகன கொடுக்கல் வாங்கல் தகராறு இடம் பெற்றுவந்ததாகவும் நேற்று முன்தினம் இருதரப்பினருக்கும் வாக்குவாதம் முற்றுப் பெற சம்பவதினம் காலை 11 மணிக்கு எதிர்த்தரப்பினர் இளைஞனை துரத்திச் சென்று வீடொன்றில் வைத்து வாளால் வெட்டி காயப்படுத்திவிட்டு மூவரும் தலைமறைவாகியுள்ளனர்.

இச்சம்பவத்தில் வல்லிபுரக் குறிச்சி காளி கோவிலடியைச் சேர்ந்த நடராசா நவதீசன் (வயது 17) என்ற இளைஞனே பலத்தவாள் வெட்டு காயங்களுடன் மந்திகை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.இது தொடர்பாக பருத்தித்துறைப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஸ்ரீ-24)

# ஆறுமுகநாவலரின் குருபூசைத் தினம்

யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் ஆறுமுகநாவலர் குருபூசை தினம் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் து.சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்பாடசாலையிலுள்ள புராதன ஆலயத்தில் நான்கு நாயன்மார்களுக்குரிய சிறப்பு அபிஷேக பூசைகள் இடம்பெறவுள்ளன.

அத்துடன் புராதன மண்டபத்தில் கதா பிரசங்கம், வில்லுப்பாட்டு, மாணவர்களின் சிறப்பு நிகழ்வுகளும் நடைபெறவுள்ளதாக சமய விழா குழுவினர் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-2-136)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

யாழ். சைவபரிபாலன சபையினால் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 131 ஆவது குருபூசை தினம் எதிர்வரும் 28ஆம் திகதி காலை9மணிக்கு இல66, கல்லூரிவீதி,நீராவியடியில் உள்ள நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் சைவபரிபாலன சபையின் தலைவர், சிவநெறிப் புலவர் த.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் சுப்பிரமணியம் தியாகலிங்கம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.அத்துடன் கலை நிகழ்வுகளும் பரிசில்கள் வழங்கும் நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (ஸ்ரீ-2)




# பெண்களுக்கெதிரான வன்முறை குறித்த கருத்தமர்வு

(கொழும்புத்துறை)

பெண்களுக்கெதிரான வன்முறை வாரத்தினை அனுஷ்டிக்கும் முகமாக இலவச சட்டசேவை மற்றும் சட்டஆலோசனை சேவைகளையும் வழங்கும் நோக்கிலான கருத்தமர்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 தொடக்கம் 12 மணிவரை யாழ். பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சிறுவர் அபிவிருத்திப் பெண்கள் விவகார அமைச்சின் தேசிய பெண்கள் குழு தவிசாளர் கலாநிதி நிலா குணசேகர, சிறப்பு விருந்தினராக யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் ''பெண்களுக்கெதிரான வன்முறைகளை நீக்குவோம்'' என்ற பொருளில் பெண்கள் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் திருமதி சறோஜா சிவச்சந்திரன் ''சட்டரீதியான பாதுகாப்புக்கள்'' எனும் பொருளில் மனித உரிமை ஆணைக் குழுவின் திட்ட அலுவலர் கே.கமலேஸ்வரன் ஆகியோர் வளவாளர்களாக கலந்து மேற்குறித்த கருப்பொருளில் கருத்தமர்வை வழங்கவுள்ளதுடன் ஆவணத் திரைப்படமும் காணப்பிக்கப்பவுள்ளது. (ஸ்ரீ-51)

# பாழடைந்த கிணற்றிலிருந்து இரு ஷெல் குண்டுகள் மீட்பு

கரவெட்டி நெல்லியடி திருமகள் சோதி ஒழுங்கையில் உள்ள ஐயப்பன் கோவிலுக்கு அருகாமையில் உள்ள பாழடைந்த கிணற்றிலிருந்து இரண்டு சக்திவாய்ந்த ஷெல் குண்டுகளை இராணுவத்தினர் நேற்று முன் தினம் மாலை மீட்டுள்ளனர்.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது, ஐயப்பன் கோவில் பகுதியைச் சேர்ந்த தொண்டர்கள் பாழடைந்த கிணற்றை திருத்தி இறைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போது இரண்டு சக்திவாய்ந்த ஷெல் குண்டுகளை கண்டுள்ளனர்.

இது தொடர்பாக உடனடியாக இராணுவத்தினருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த இராணுவ அதிகாரி மேஜர் அகல பொல மற்றும் இராணுவக்குழுவினர் இரண்டு ஷெல் குண்டுகளை பாதுகாப்பாக மீட்டுள்ளனர்.

இதேவேளை இக்குண்டுகள் 1985 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் வடமராட்சிப் பிரதேசத்தில் இடம்பெற்ற போரின்போது பயன்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-24)

# வீதி விளக்குகளை ஒளிர வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபைப் பகுதிகளில் பெரும்பாலான வீதி விளக்குகள் எரிவதில்லை என்றும் அது சம்பந்தமான நடவடிக்கைகளை எடுக்குமாறு சனசமூக பிரதிநிதி மகேஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில் நேற்று நடைபெற்ற உள்ளூராட்சி மறுசீரமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி ஆலோசனைச் சபை ஆகியவற்றின் கலந்துரையாடலில் அவர் மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளார்.

இக்கலந்துரையாடலில் திணைக்களத் தலைவர்களும் சனசமூக பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

ஏற்கனவே இவ்விடயம் பற்றி மின்சார அத்தியட்சகருடன் கலந்துரையாடிய தெரிவித்த அவர் இது தொடர்பாக உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-29)

# பெண்ணொருவரின் தாலிக்கொடி இனந்தெரியாதோரால் அபகரிப்பு



(மாதகல்)

சில்லாலைப் பகுதியில் உள்ள சாந்தைக் கிராமத்திற்கு செல்லும் வழியில் வைத்து இணந்தெரியாதவர்களினால் பெண் ஒருவரின் தாலிக்கொடி அபகரிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் பெண்ணொருவர் சில்லாலைப் பகுதியில் உள்ள சாந்தைக் கிராமத்திற்கு தனியாக நடந்து சென்று கொண்டிருக்கும்போது மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருநபர்கள் குறித்த பெண்மணியைத் தாக்கியதுடன் அவரின் தாலிக்கொடியையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நடைபெற்ற இடம் ஆட்கள் நடமாட்டம் குறைந்த பகுதி என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-47)

பலாலி வீதியை அகலிப்பது தொடர்பான கூட்டம் நேற்று முன்தினம் திருநெல்வேலியில் உள்ள நல்லூர் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதம பொறியியலாளர் பி.சுதாகர் ஆகியோர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எ.சாள்ஸ்)

# கட்டாரில் மரணமான இலங்கையர் குறித்த விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

கட்டாரில் இலங்கையர் ஒருவர் மரண மடைந்தமை தொடர்பாக அந்த நாட்டுப் பொலிஸார் விசேட விசாரணையை ஆரம்பித்துள்ள தாக கட்டாருக்கான இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த விசாரணை தொடர்பாக அறிக்கை விரைவில் இலங்கைத் தூதுவரிடம் சமர்ப்பிக்கவுள்ளதாக தூதரகத்தின் தொழில் ஆலோ சகர் சேக்கா பிரேமசிறி குறிப்பிட்டுள் ளார்.

நாத்தாண்டிய துன்கண்ணாவ பகுதியைச் சேர்ந்த ஒருவரே கட்டா ரில் ஒரு வார காலத்துக்கு முன்னர் மரணமடைந்ததாகத் தெரிவிக்கப்படு கிறது.

இவ்வாண்டு மார்ச் மாதம் 15 ஆம் திகதி கட்டாரில் உள்ள வைத் தியசாலையில் தொழில் வாய்ப்பு பெற்றுச் சென்றிருந்த இந்த நபர் திடீரென மரணமானதாக கடந்த 16 ஆம் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த மரணம் தொடர்பான விசார ணைகள் நிறைவடைந்ததும் குறித்த நபரின் சடலத்தை உடனடியாக இலங்கைக்கு அனுப்பி வைக்க நடவ டிக்கை எடுக்கப்படுமென கட்டாருக் கான இலங்கைத் தூதரகத்தின் தொழில் ஆலோசகர் குறிப்பிட்டுள் ளார்.

இதேவேளை கட்டாரில் மரண மான இந்த நபருடன் விடுதியில் தங்கியிருந்த மேலும் 9 இலங்கை யர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக வெளி நாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவித்தார். (ஶ்ரீ-2)

# கொழும்பில் 60 ஆயிரம் வீடுகள் அமைக்கும் திட்டம்

(கொழும்பு)

கொழும்பு மாவட்ட வசதியற்ற குடிசைவாசிகளுக்கென 60 ஆயி ரம் வீடுகளை அமைக்கும் திட்டத் தை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

அதன் முதற்கட்டமாக கொலன் னாவை சாலமுள்ள நெலும்புர பகுதியில் ஆயிரத்து 600 வீடு களை அமைப்பதற்கான நிர்மா ணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மூவாயிரத்து 200 மில்லி யன் ரூபா செலவிலான இந்த முதல் கட்டத்துக்கான நிர்மாணப் பணிகளை பாராளுமன்ற உறுப் பினர்களான நாமல் ராஜபக்ஷ மற்றும் துமிந்த சில்வா இருவரும் நேற்று முன்தினம் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைத்தனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவின் ஆலோசனையிலான இத் திட்டம் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவால் முன் னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத் தக்கது. (ஶ்ரீ-2)

# மயோன் முஸ்தபாவுக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் முன் னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.முஸ்தபாவுக்கு எதிரான இலஞ்சக் குற்றச்சாட்டு வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, மயோன் முஸ்தபா இதய நோய்க் காக பிரிட்டனில் மருத்துவ சிகிச்சை பெறுவதாக அவரின் சட்டத்தரணி தெரிவித்தார்.

அதையடுத்து இவ் விசாரணை அடுத்த வருடம் பெப்ரவரி 22 ஆம்திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது சரத்பொன்சேகாவுக்கு ஆதர வளிப்பதற்காக தேசிய சுதந்திர முன் னணி நாடாளுமன்ற உறுப்பினர் மொஹமட் முஸம்மிலுக்கு 30 மில்லி யன் ரூபா வழங்க முன்வந்தமை தொடர்பாக மயோன் முஸ்தபாவுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (ஶ்ரீ-52)

# கல்வி டிப்ளோமா செயலமர்வுகள்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவக இரண் டாம் வருட கல்வி டிப்ளோமா செயல மர்வுகள் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்ப மாக வுள்ளதாக சிரேஷ்ட விரிவுரையா ளரும் தேசிய கல்வி நிறுவக பிராந்திய இணைப்பாளருமான திருமதி. த.வில்வநாதன் அறிவித் துள்ளார்.

இச் செயலமர்வில் சகல கல்வி டிப்ளோமா ஆசிரியர்களையும் தவ றாது கலந்துகொள்ளுமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஶ்ரீ)




# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்


- 1120 - இங்கிலாந்து மன்னன் முதலாம் ஹென்றியின் மகன் வில்லியம் அடெலின் பயணஞ்செய்த கப்பல் ஆங்கிலக் கால்வாயில் மூழ்கியதில் கொல்லப்பட்டான்.
- 1542 - ஆங்கிலேயப் படைகள் சொல்வே மொஸ் என்ற இடத்தில் ஸ்கொட்லாந்துப் படைகளைத் தோற்கடித்தன.
- 1667 - கவ்காசியாப் பகுதியில் ஷெமாக்கா என்ற இடத்தில் நிகழ்ந்த நிலநடுக்கத்தில் 80ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.
- 1703 - பிரித்தானியாவில் மிகப் பெரும் சூறாவளி பதியப்பட்டது. 9ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.
- 1758 - பிரித்தானியப் படைகள் பிரெஞ்சு வசமிருந்த Fort Duquesne (பென்சில்வேனியா) ஐக் கைப்பற்றினர்.
- 1783 - கடைசி பிரித்தானியப் படைகள் நியூயோர்க் நகரை விட்டுப் புறப்பட்டன.
- 1795 - சுதந்திரப் போலந்தின் கடைசி மன்னன் ஸ்டனிஸ்லாஸ் ஒகஸ்ட் பொனி யாட்டோவ்ஸ்கி பதவியில் இருந்து அகற்றப்பட்டு ரஷ்யாவுக்கு நாடு கடத்தப்பட்டான்.
- 1833 - சுமாத்திராவில் 8.7 நிலநடுக்கம் ஏற்பட்டது.
- 1867 - அல்பிரட் நோபல் டைனமைட்டுக்குக் காப்புரிமம் பெற்றார்.
- 1905 - டென்மார்க் இளவரசன் கார்ல் நோர்வே வந்து சேர்ந்தான். இவன் பின்னர் "ஏழாம் ஹாக்கோன்" என்ற பெயரில் நோர்வேயின் மன்னனானான்.
- 1926 - ஐக்கிய அமெரிக்காவின் ஆர்கன்சஸ் மாநிலத்தில் இடம்பெற்ற சூறாவளியில் 76 பேர் கொல்லப்பட்டு பலர் காயமுற்றனர்.
- 1936 - ஜப்பான், ஜேர்மனி ஆகியன சோவியத் ஒன்றியம் தம் மீது படையெடுத்தால் அதனை கூட்டாக எதிர் கொள்ள பேர்லின் நகரில் ஒப்பந்தம் செய்து கொண்டன.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய இராச்சியம், டெப்ட்ஃபோர்ட் நகரில் வூல்வேர்த் கடைத்தொகுதியில் ஜெர்மனிய விமானங்கள் ஏவுகணை வீசியதில் 160 பேர் கொல்லப்பட்டனர்.
- 1950 - ஐக்கிய அமெரிக்காவின் வடகிழக்கில் ஏற்பட்ட சூறாவளியினால் மேற்கு வேர்ஜீனியாவில் 323 பேர் கொல்லப்பட்டனர்.
- 1950 - மக்கள் சீனக் குடியரசு ஐ.நா படைகளை எதிர்க்க கொரியப் போரில் ஈடுபட்டது.
- 1952 - அகதா கிறிஸ்டியின் மேடை நாடகமான த மௌஸ்ட்றப் (The Mousetrap) திரைப்படமாக வெளிவந்தது.
- 1973 - கிரேக்கத் தலைவர் ஜோர்ஜ் பாப்படபவுலொஸ் இராணுவப் புரட்சி ஒன்றில் பதவி இழந்தார்.
- 1975 - சூரினாம் நெதர்லாந்திடம் இருந்து விடுதலை பெற்றது.
- 1981 - ரொடீசியாவிலிருந்து மும்பாய்க்குப் புறப்பட்ட ஏர் இந்தியா விமானம் கடத்தப்பட்டு தென்னாபிரிக்காவின் டர்பன் நகருக்குச் செலுத்தப்பட்டது.
- 1987 - பிலிப்பைன்சில் நீனா என்ற சூறாவளி தாக்கியதில் ஆயிரத்து 36 பேர் கொல்லப்பட்டனர்.
- 1992 - செக்கொசிலவாக்கியாவின் நாடாளுமன்றம் நாட்டை செக் குடியரசு, சிலவாக்கியா என இரண்டாக ஜனவரி முதலாம் திகதி 1993 இலிருந்து பிரிக்க முடிவெடுத்தது.
- 2000 - அசர்பைஜான் தலைநகர் பக்கு நகரில் இடம்பெற்ற 7.0 அளவை நிலநடுக்கத்தில் 26 பேர் கொல்லப்பட்டனர்.
- 2006 - சீனாவின் தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பகுதிகளில் ஏற்பட்ட நிலக்கரிச் சுரங்க விபத்தில் 53 பேர் கொல்லப்பட்டனர்.

## பிறப்புகள்

- 1844 - கார்ல் பென்ஸ், ஜெர்மனிய வாகனப்பொறியாளர் (இ.1929)
- 1952 - இம்ரான் கான், பாகிஸ்தானின் முன்னாள் துடுப்பாட்டக்காரர்

## இறப்புகள்

- 1974 - ஊ தாண்ட், பர்மியர், முன்னாள் ஐ.நா செயலாளர் (பி.1909)
- 1979 - டெசி பெல்ஜியத் தமிழறிஞர் (பி. 1898)



1839 - இந்தியாவில் ஏற்பட்ட பலத்த சூறாவளியால் ஆந்திராவின் கொரிங்கா நகரம் முற்றாக சேதமடைந்து 30ஆயிரம் பேர் வரையில் கொல்லப்பட்டனர்.



யாழ்.கல்விவலய முறைசாரா கல்விப்பிரிவினரால் அண்மையில் கல்வி வலய முகாமைத்துவமண்டபத்தில் மனையியல் கண்காட்சியும் விற்பனையும் இடம்பெற்றது.இந்நிகழ்வுக்கு விருந்தினர் அழைத்துவரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாகாண தொழில்நுட்ப உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.கமல்ராஜ் உரையாற்றுவதையும் யாழ்.வலய தொழில்நுட்ப உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.இராசநாயகம், யாழ்.வலய ஆசிரிய ஆலோசகர் இ.இரவீந்திரன், யாழ்.வலய கணக்காளர் எஸ்.கமலரூபன், செயல்திட்ட உத்தியோகத்தர் தி.சிவானந்தன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:-இருபாலை செய்தியாளர்)

# வாகன விபத்தில் பிரித்தானிய சுற்றுலாப் பயணி உயிரிழப்பு

வாகன விபத்தொன்றில் காயமடைந்த 59 வயதான பிரித்தானிய சுற்றுலாப் பயணியொருவர் நேற்று காலை உயிரிழந்துள்ளார்.

யால சரணாலயத்தை நோக்கிப் பயணித்த சுற்றுலாப் பயணிகளின் வாகனமும் எல்லப் பிரதேச செயலக அலுவலகத்தின் வாகனமும் றந்தெனிய பகுதியில் நேருக்கு நேர் மோதியதாலேயே இந்த விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காயமடைந்த தம்பதியினர் உடனடியாக மொனராகலை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர்.

இந்த விபத்தில் காயமடைந்த மற்றுமொருவர் ஆபத்தான நிலையில் மொனராகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்த விபத்துச் சம்ப வம் தொடர்பாக நேற்று நீதிவான் விசாரணைகளை நடத்தினார்.

(ஸ்ரீ-2)

# வீதிகளில் குப்பைகளை கொட்டுவோர் மீது பொலிஸார் கடும் நடவடிக்கை

(பருத்தித்துறை)

வவுனியா நகரப் பகுதி மற்றும் சுற்றுப் புறங்களில் உள்ள வீதிகளில் குப்பை கூழங்களை கொட்டுவோர் மீது பொலிஸார் கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தெருவோரங்கள் மற்றும் சந்திகளில் காணப்படும் குப்பை கூழங்களை அப் பகுதியில் உள்ள இளைஞர்கள் மூலமாக துப்புரவு செய்யப்பட்டு வருகிறது.

அத்துடன் வீதிகளில் குப்பைகளை போட வேண்டாம் என்று ஒவ்வொரு வர்த்தக நிலையங்களுக்கும் சென்று பொலிஸார் அறிவுறுத்தி வருகின்றனர்.

தற்போது அப்பகுதிகளில் பெய்துவரும் மழையை அடுத்து டெங்குநோய் பரவலாம் என்ற அச்சத்தினால் இவ்வாறான நடவடிக்கைகளை பொலிஸார் எடுத்து வருகின்றனர்.

இதுதொடர்பான கருத்தரங்குகளும் வர்த்தகர்களுக்கு அண்மையில் இடம்பெற்றுள்ளது.

(ஸ்ரீ-10)

# அத்தியாவசிய பொருட்களின் விலைகள் சடுதியாக உயர்வு

(கொழும்பு)

நாட்டில் அரிசி, சீனி, பருப்பு, வெங்காயம் முதலிய பல அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் சடுதியாக உயர்வடைந்துள்ள தென சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அத்தியாவசியப் பொருட்ளின் விலையேற் றத்தினால் பாமரமக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை நீக்கப்பட்டதனை அடுத்து அரிசியின் விலை உயர் வடைந்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

குறிப்பாக சம்பா அரிசியின் கிலோ ஒன்றிற்கான கட்டுப்பாட்டு விலை 70 ரூபாவாக காணப்பட்டதாகவும் தற்போது இந்த விலை யில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனை விட அரசி, தேங்காய் , தேங்காய் எண்ணெய் , உருளைக் கிழங்கு , பெரிய வெங்காயம், சீனி உள்ளிட்ட பல பொருட்களுக்கான விலைகள் உயர்வடைந்துள்ளன.

(ஸ்ரீ-2)

# புலிகள் மீதான தடை நீடிப்புக்கு எதிராக சென்னை மேல்நீதிமன்றத்தில் வழக்கு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான மத்திய அரசின் தடை நீடிப்பு சரியானது என்று பிரகடனப்படுத்தி டில்லி மேல் நீதிமன்ற நீதிபதி விக்ரம் ஜித்சென் தலை மையிலான விசேட நீதிமன்றத்தால் வழங் கப்பட்டிருக்கும் தீர்ப்பு செல்லுபடியற்றது என அறிவிக்க வேண்டும் என்று கோரி சென்னை மேல் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டு உள்ளது.

சிறைக் கைதிகளின் உரிமைகளுக்கான பேரவை என்ற அமைப்பு சட்டத்தரணி பி. புகழேந்தியின் நெறிப்படுத்தலில் இவ் வழக்கைத் தாக்கல் செய்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை நீடிப்பை கடந்த மே 14 ஆம் திகதி மத்திய அரசு அறிவித்திருந்தது.

இத்தடை நீடிப்பு சட்ட ரீதியானதா? இல்லையா? என்று விசாரித்து - ஆராய்ந்து - தீர்ப்பு வழங்கவே விசேட ஆயம் நியமிக்கப்பட்டது.

ஆனால் விசேட ஆயம் புலிகள் இயக்கம் மீதான மத்திய அரசின் தடை நீடிப்பு சட்ட ரீதியானது - சரியானது- செல்லுபடியானது என்ற முடிவுக்கு வந்ததற்கு பிரதான காரணமாக நாடு கடந்த தமிழீழ அரசின் உருவாக்கத்தை குறிப்பிட்டுக் காட்டி இருந்தது.

ஆனால் நாடு கடந்த அரசு கடந்த மே மாதம் 17 ஆம் திகதி தான் அமைக்கப்பட்டு இருக்கின்றது.

ஆனால் விசேட ஆயம் இவ் விடயத்தை கருத்தில் கொள்ளாமல் தவறான தீர்ப்பு வழங்கி விட்டது என மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)


## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 31.10.2009 வரை அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதியில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| தொடர் இல. | கிளை | ஏலம் விடப்படும் திகதி | இடம் |
|---|---|---|---|
| 01 | யாழ். ஸ்ரான்லி வீதிக்கிளையும் மானிப்பாய் சேவை நிலையமும் | 12.12.2010 மு.ப. 8.30 | மக்கள் வங்கி யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளை |
| 02 | காங்கேசன்துறை கிளையும் மல்லாகம் சேவை நிலையமும் | | |
| 03 | யாழ்.பிரதான வீதிக் கிளையும் உரும்பிராய் சேவை நிலையமும் | | |
| 04 | நெல்லியடி கிளை | | |
| 05 | அச்சுவேலி கிளை | | |
| 06 | சங்கானை கிளை | | |
| 07 | சுன்னாகம் கிளை | | |
| 08 | சாவகச்சேரி கிளை | | |
| 09 | வல்வெட்டித்துறை கிளை | | |
| 10 | யாழ். பல்கலைக்கழக கிளையும் திருநெல்வேலி சேவை நிலையமும் | | |
| 11 | யாழ். கன்னாதிட்டி கிளையும் இணுவில் சேவை நிலையமும் | | |
| 12 | பருத்தித்துறை கிளை | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி,
பிரதேச காரியாலயம்,
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
2010.11.24

(சி-1666)


# வடக்கு கிழக்கில் ஜனநாயக சூழலை தோற்றுவிப்பதற்காக விரைவில் ஆர்ப்பாட்டம்

## ஐக்கிய சோசலிச கட்சி அறிவிப்பு

(கொழும்பு)

யுத்தம் முடிவடைந்துள்ள போதிலும் வடக்கிலும் கிழக்கிலும் இன்னும் சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப்படவில்லை. மாறாக அங்கு இராணுவமயமான ஒரு சூழலே இன்றும் காணப்படுகின்றது.

ஆகையினால் அவ்வாறான இராணுவ சூழலை இல்லாதொழித்து ஜனநாயக சூழலை தோற்றுவிப்பதற்காக அனைத்து மக்களையும் இணைத்துக் கொண்டு வடக்கில் வெகுவிரைவில் பாரிய ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொள்ளவுள்ளதாக ஐக்கிய சோசலிக் கட்சியின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில், அரசாங்கம் சமர்ப்பித்துள்ள புதிய வரவு செலவு திட்டத்தின்மூலம் அதன் கபடத்தனமும் பொய்ப்பித்தலாட்டங்களும் மேலும் வெளிச்சத்துக்கு வந்துள்ளன.

தொழிலாளர் வர்க்கத்திற்கு நிவாரணங்களை வழங்குவதற் குப் பதிலாக அவர்களுக்கு மேலும் சுமைகளையே வழங்கியுள்ளது.

அரச ஊழியர்களுக்கு 5 சதவீதத்தால் சம்பள அதிகரிப்பை வழங்கியிருப்பதானது சாதாரண அரச ஊழியர்களுக்கு நன்மை யளிக்கப் போவதில்லை.

மாறாக அதிக வருமானம் பெறுகின்ற அரச ஊழியர்களுக்கே அது நன்மையளிக்கும். இதன்மூலம் அரசாங்கம் சாதாரண மக்களை மேலும் நசுக்குவது தெளிவாகத் தெரிகின்றது.

அரச ஊழியர்களுக்கு 5 சதவீத சம்பள அதிகரிப்பை வழங்குவதாக தெரிவித்திருக்கும் அரசாங்கம் 6.5 மில்லியன் தனியார் துறை ஊழியர்களை நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. சாதாரண மக்களின் வாக்குகளை பெற்றுக்கொண்டு ஆட்சி பீடமேறியவர்கள் இன்று அவர்களையே நசுக்கும் வகையி லேயே செயற்படுகின்றனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் 2 ஆயிரத்து 500 ரூபாய் சம்பள உயர்வை வழங்குவதாக ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ கூறினார்.

ஆனால் அந்த வாக்குறுதி இதுவரையிலும் நிறைவேற்றப்படவில்லை. எனவே அரசாங்கம் பொய்யான வாக்குறுதிகளையே தொடர்ந்தும் வழங்கி மக்களை ஏமாற்றி வருகிறது எனத் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)

# மேல் மாகாண கல்வித் திணைக்களம்

# க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை -2010

# பயிற்சி வினாத்தாள் - வரலாறு

## பகுதி - I

**1 மணித்தியாலம்**

- எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.
- 1-40 வரையான வினாக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள(1), (2), (3), (4) விடைகளுள் சரியான அல்லது மிகப் பொருத்தமானதைத் தெரிவு செய்க.
- உமக்குத் தரப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய விடையளிப்பதற்கான கூட்டினுள் பொருத்தமான கூட்டினைத் தெரிவு செய்து நீர் தெரிவு செய்த விடையின் இலக்கத்தினை ஒத்தகூட்டில் (X) இடுக.
- விடைத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாகப் பின்பற்றுக.

1) "நிகழ்காலத்தை அறிந்து கொள்வதற்கு ஒரு திறவுகோலாக இறந்த காலத்தை அறிந்து கொள்ள வேண்டும்" வரலாறு பற்றிய இக்கூற்றை முன்வைத்தவர்.
(1) ஜீ.எம்.டிரவலியன் (2) சிறி ஜவகர்லால் நேரு
(3) ஈ.எச்.கார் (4) கலாநிதி செனரத் பரனவிதான

2) பண்டைய மன்னராட்சிக் காலத்தில் நடைமுறையில் இருந்த ஐந்து அமைச்சர் பரம்பரைகள் பற்றியும், சந்தை முகாமைத்துவம் பற்றியும் குறிப்பிடும் கல்வெட்டுக்களை உள்ளடக்கிய சரியான விடை.
(1) பதுளை தூண் கல்வெட்டு, சிதுள்பவ்வ கல்வெட்டு
(2) பம்பரகஸ்தலாவ கல்வெட்டு, பதுளை தூண் கல்வெட்டு
(3) கந்துறுவெவ கல்வெட்டு, பதுளை தூண் கல்வெட்டு
(4) கத்துறுவெவ கல்வெட்டு, சிதுள்பவ்வ கல்வெட்டு

3) இந்தியாவின் பதினாறு பெருங், குடியேற்றங்களுள் பிரதான இராச்சியங்கள் நான்கினை உள்ளடக்கியுள்ள விடை.
(1) மகத, கோசல, வத்ச, அவந்தி (2) அங்க, மகத, காசி, கோசல
(3) கோசல, வத்ச, அவந்தி, கந்தார (4) வஜ்ஜி, மல்ல, அஸ்மக, அவந்தி

4) இந்தியாவில் புத்தர் சிலைகளை செதுக்கும் செயற்பாடுகள் எந்த மன்னனின் ஆட்சிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது?
(1) அசோகச் சக்கரவர்த்தியின் காலத்தில்
(2) பிந்துசார மன்னனின் காலத்தில்
(3) சந்திரகுப்த மௌரிய மன்னன் காலத்தில்
(4) கனிஷ்க மன்னனின் காலத்தில்

5) வரலாற்றுக்கு முந்திய யுகத்தில் இலங்கையில் வாழ்ந்த மனிதன் எப் பெயரினால் இனங்காணப்படுகிறான்?
(1) ஹோமோ இரெக்டஸ் (2) ஹோமோ சேப்பியன் பலாங்கொடை மனிதன்
(3) ஹோமோ எபிதிகஸ் (4) ஹோமோ நியண்டதால்


6) துட்டகைமுனு மன்னின் படைகள் போரில் வெற்றி பெறும் நோக்குடன் சென்ற பாதையின் பிரதான தரிப்பிடங்களை ஒழுங்கு முறையில் உள்ளடக்கியுள்ள சரியான விடை.
(1) கஜரகாம, மகாகாம, கோட்டநகர், லபுகாம
(2) மகாகாம, கஜரகாம, அம்பதித்த, கோட்டநகர்
(3) மகாகாம, குத்தகால, மகியங்கனை, விஜிதகாம
(4) சித்தலபப்பத்த, குத்தகால, மகாகாம, உபதிஸ்ஸகாம

7) மாத்தளை அளுவிகாரையில் எந்த மன்னனின் ஆட்சிக்காலத்தில் வைத்து திரிபிடகம் நூல் வடிவில் எழுதுவிக்கப்பட்டது.
(1) மகாசேனன் மன்னனின் காலம் (2) மித்சென் மன்னன் காலம்
(3) வசப மன்னனின் காலம் (4) வலகம்பா மன்னனின் காலம்

8) கி.பி. 1215ல் கலிங்கமாகன் பொலநறுவையை ஆக்கிரமித்த போது இந்த நாட்டை ஆட்சி செய்த மன்னன்,
(1) நிஸங்கமல்லன் (2) 6ம் மகிந்தன்
(3) பராக்கிரம பாண்டியன் (4) சுகலா தேவி

9) பொலநறுவை யுகத்தில் எழுதப்பட்ட கிரந்தங்களை மட்டும் உள்ளடக்கியுள்ள விடை,
(1) சசதாவத்த, முவ்தேவதாவத்த, அமாவத்துற
(2) பூஜாவலிய, முவதேவ்தாவத்த, அமாவத்துற
(3) அமாவத்துற, புத்சரண, தம்பியா அட்டுவா கடபதய
(4) சியபஸ்லகர, புத்சரண, அமாவத்துற

10) கீழே புராதான குளம் ஒன்றின் மாதிரியும், அதன் சில கூறுகளும் A, B, C, D என்ற எழுத்துக்களினால் குறித்துக் காட்டப்படுகின்றன. இவ்வொழுங்கு முறையில் அமைந்த விடையைத் தெரிவு செய்க.



(1) சுருங்கை, கலிங்கற்தொட்டி, கலிங்கல், அலைதாங்கி
(2) கலிங்கற் தொட்டி, சுருங்கை, கால்வாய், அலைதாங்கி
(3) கலிங்கற் தொட்டி, அலைதாங்கி, கால்வாய், சுருங்கை
(4) அலைதாங்கி, கலிங்கற் தொட்டி, கால்வாய், சுருங்கை

11) "கி.பி. 1462 மலையகத்தில் புரட்சி செய்த ஜோதிய என்பவனை முறியடிப்பதற்கு அம்புளுகல குமாரனை அனுப்பியமை" இலங்கையில் வாழ்ந்த ஒருவர் இச்செயற்பாடு பற்றி எந்த மன்னனின் காலத்தில் செவியுற்றிருக்க முடியும்?
(1) 4ம் புவனேகபாகு மன்னனின் ஆட்சிக் காலத்தில்.
(2) 2ம் பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக் காலத்தில்.
(3) 6ம் பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக் காலத்தில்.
(4) 3ம் விஜயபாகு மன்னனின் ஆட்சிக் காலத்தில்.

12) கீழே தரப்பட்டுள்ள நிரல் "அ" வையும் "ஆ" வையும் பொருத்தும் போது வரும் சரியான விடை,

| நிரல் "அ" | நிரல் "ஆ" |
|---|---|
| 1. இறுதி நபி முஹம்மத் (ஸல்)<br>2. மகா அக்பர் மன்னன்<br>3. தர்மா அசோக மன்னன்<br>4. சந்திரபானு மன்னன் | A- சுவர்ண பூமிக்கு பௌத்த சமயம் பரவுதல்<br>B- தென்கிழக்காசியாவில் மலாய நாட்டில் இருந்து வரல்<br>C- கதீஜா நாயகி<br>D- கொன்பியூசியஸ் சமயம்<br>E- மன்சத்தர் முறை அறிமுகம் |

(1) ECBA (2) CEDA (3) DCAB (4) CEAB

13) பொலனறுவை இராசதானியின் பின் இலங்கையின் இராசதானிகள் தென்மேற்கே புலம் பெயர்ந்த போது இலங்கையின் வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பாக காணக்கூடியதாக இருந்த விசேட இயல்பினைத் தெரிவு செய்க.
(1) தேசிய வர்த்தகப் பண்டங்களுள் கறுவா உட்பட வாசனைத் திரவியங்கள் பிரதான இடத்தைப் பெற்றமை.
(2) வர்த்தக நடவடிக்கைகளில் அரேபியர்கள் மட்டுமே ஈடுபட்டமை.
(3) பணப் பொருளாதார முறையொன்று காணப்பட்டமை.
(4) இந்தியாவுடன் மட்டும் வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை.

14) இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அதிகாரத்தை நிலைநாட்டுவதற்குப் போர்த்துக்கேயரினால் உருவாக்கப்பட்ட இரு கோட்டைகளை உள்ளடக்கியுள்ள விடை.
(1) சுராஜ், மலாக்கா (2) கோவா, பதவியா
(3) ஓமஸ், மலாக்கா (4) பாண்டிச்சேரி, சென்னை

15) கி.பி. 1638ல் இரண்டாம் இராசசிங்கனுக்கும் ஒல்லாந்தருக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் சில வாசகங்கள் கீழே தரப்பட்டுள்ளன. இதில் உள்ளடங்காத வாசகத்தைத் தெரிவு செய்க.
(1) போர்த்துக்கேயரை விரட்டியடிப்பதற்கு ஒல்லாந்தர் மன்னனுக்கு உதவி செய்தல் வேண்டும்.
(2) கடற்கரையுடன் நெருங்கிய நிலப் பிரதேசம் ஒன்று ஒல்லாந்தருக்கு ஒப்படைக்கப்பட வேண்டும்.
(3) சகல யுத்தச் செலவினங்களும் மன்னனால் பொறுப்பேற்கப்படல் வேண்டும்.
(4) ஒல்லாந்தருக்கு வர்த்தக ஏகபோக உரிமையைப் பெற்றுக்கொடுத்தல் வேண்டும்.

16) பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் சிவில் நிர்வாக உத்தியோகத்தர்களின் சிங்கள, ஆங்கில மொழித்தேர்ச்சியை விருத்தி செய்வதற்கு ஊக்குவிப்பு வழங்கிய பிரித்தானிய தேசாதிபதி யார்?
(1) பிறடறிக் நோத் (2) றொபர்ட் பிறவுண்றிக்
(3) வய்க்கவுன்ட் டொரிங்ரன் (4) தோமஸ் மெயிட்லண்ட்

17) நிரல் A யில் உள்ள தகவல்களுக்கு ஏற்ப நிரல் Bயை ஒழுங்குபடுத்தும் போது வரும் சரியான விடை,

| நிரல் 'A' | நிரல் 'B' |
|---|---|
| 1.மறுபிறப்பு நூலை எழுதியமை<br>2. சொல்வரின் சங்கம்<br>3. ஸ்டேட் ஜெனரல் சபை<br>4. வியன்னா உடன்படிக்கை | A-ஐக்கிய ஜேர்மனி தோற்றம் பெறல்<br>B- மக்கள் பிரதிநிதித்துவம்<br>C- கவுன்ட் கச்சர்<br>D- பிராசியாவில் வர்த்தக வளர்ச்சி<br>E- மத்திய இத்தாலி பாப்பாண்டவருக்கு மீண்டும் கிடைத்தல் |

(1) ABCD (2) CDAE (3) DACE (4) CDBE

18) ஜோசப் மசினியினால் உருவாக்கப்பட்ட இத்தாலிய இளைஞர் சங்கத்தின் பிரதான கொள்கை எது?
(1) அரசு என்ற கொள்கை (2) சகல மக்களும் சமமானவர்களே
(3) ஐக்கியமும் சுதந்திரமும் (4) சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்

19) "புராதன தென் கிழக்காசிய மக்களிடம் இயற்கையின் அமைப்பை பயன்படுத்தும் விஞ்ஞான அறிவு காணப்பட்டது" இவ்வறிவை பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட ஆக்கம் பின்வருவனவற்றுள் எதுவாகும்?
(1) பொரோபுதூர் விகாரை (2) தாஜ்மஹால் நினைவுச் சின்னம்
(3) இந்தியாவின் சாஞ்சி தூபி (4) அங்கோவர்ட் கோபுரம்

♦ கீழே தரப்பட்டுள்ள கருத்துச் சோடிகளில் முதலாவது இரண்டாவதில் ஏற்படுத்தும் மாற்றம், அல்லது இரண்டாவது முதலாவதில் ஏற்படுத்தும் மாற்றம் என்பவற்றைக் கருத்திற் கொண்டு 20-22 வரையான வினாக்களுக்கு விடையளிக்க.
A. மானிய முறை - தனிநபர் வரி நிர்வாக முறையாகும்
B. கலிலியோ கலிலி - புவி ஈர்ப்புவிசையை கண்டுபிடித்தமை
C. இங்கிலாந்தின் தோமஸ் முவர் - இங்கிலாந்தின் வில்லியம் சேக்ஸ்பியர்
D. கால்மாக்ஸ் - சமவுடமை வாத கோட்பாடு

20) முதலாவது காரணமாக இரண்டாவது தோற்றம் பெற்றது.
(1) D (2) A (3) C (4) B

(தொடரும்)

# கார்த்திகை மாத இராசிபலன்கள்

## 17.11.2010 முதல் 15.12.2010 வரை

**சிவல்புரி சிங்காரம்**




**(மூலம், பூராடம், உத்தராடம் முதலாம் பாதம்)**

**கோதண்ட ராகு கொடுக்கும் தனலாபம்!**

***பேசிய சில நிமிடங்களிலேயே மனதில் இடம் பிடித்து விடும் தனுசு இராசி நேயர்களே!***

நீங்கள் ஆசைகள் அதிகம் பெற்றவர்கள். அதை வாங்க வேண்டும், இதை வாங்க வேண்டும் என்ற எண்ணம் ஆரம்பத்திலே உங்கள் மனதின் அடித்தளத்தில் இருக்கும். உதவி செய்வது உங்களுக்கு கை வந்த கலை.

ஒருவரை பார்த்த மாத்திரத்திலேயே எடை போட்டு விடுவீர்கள். நீங்கள் பழக்கத்திற்கு இனியவர்கள் என்பதால், மற்றவர்கள் உங்களுடன் இரகசியங்களைப் பகிர்ந்து கொள்ள விரும்புவர்.

இம்மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்திலேயே குரு விரய கதியில் இருந்தாலும், மாதக் கடைசியில் முழுமையாக பலம் பெறுகிறார். குறிப்பாக, இராசிநாதன் பலம் பெறும் பொழுது, எதைத் தொட்டாலும் அதில் வெற்றி கிடைக்கும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வளர்ச்சி கூடும். சேர்க்கையில் நல்லவர் யார்? கெட்டவர் யார்? என்பதை இனம் கண்டு கொள்வீர்கள்.

தனுசில் செவ்வாய் சஞ்சரித்த பின் இனிய காரியங்கள் ஏராளமாக நடைபெறும். பணிகளில் துரிதம் காட்டுவீர்கள். பட்டாசு வெடித்து கொண்டாடும் தீபாவளி போல, ஒவ்வொரு நாளும் திருநாளாக அமையும். பணத்தேவைகள் இனி பூர்த்தியாகும். ஆரோக்கியமும் சீராகும்.

**மீனத்தில் சஞ்சரிக்கும் குரு!**

மீன இராசியில் கடந்த 21 ஆம் திகதி குரு சஞ்சரிக்கப் போகிறார். முன்பு அதே இடத்தில் சஞ்சரித்த பொழுது, அதிசாரமாக சஞ்சரித்தார். அப்பொழுது, அதிக பலன்களை கொடுக்கவில்லையே என்று நீங்கள் நினைத்திருக்கலாம். ஆனால், இப்பொழுது அற்புதமான பலன்களை அள்ளி வழங்கும் விதத்தில் வக்கிரமின்றி சஞ்சரிக்கப் போகிறார். எனவே, இக்காலத்தை ஒரு பொற்காலமாக நீங்கள் கருதலாம். தக்க விதத்தில் தன வரவும் வந்து சேரும். தாராளமாக செலவிட்டு மகிழ்வீர்கள். வீடு, இடம் வாங்க போட்ட திட்டங்கள் நிறைவேறும். வியக்கும் விதத்தில் வாகனங்களையும் வாங்கி மகிழ்வீர்கள்.

குருவின் பார்வை 8,10,12 ஆகிய இடங்களில் பதிவதால், தொழில் வளர்ச்சி கூடும். துணையாக இருப்பவர்கள் தோள் கொடுத்துதவுவர்.

பட்டங்களும், பதவிகளும் வந்து சேரும். தங்கம், வெள்ளி போன்றவைகள் தாராளமாக வந்துசேர வழி கிடைக்கும். கோதண்ட குரு கொடுக்கும் பலன் அதிகம் என்றாலும், குறிப்பாக, வீட்டுப்பிரச்சினைகளை தீர்த்து வைக்கும். அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் வந்து சேரும்.

**தனுசு செவ்வாயின் ஆதிக்க காலம்!**

விரயாதிபதி செவ்வாய், உங்கள் இராசிக்கு 5 ஆம் இடத்திற்கும் அதிபதியாவதால், எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு மேல் தனுசு செவ்வாயின் ஆதிக்க காலத்தில் பிள்ளைகள் வழியில் சுப விரயங்கள் உருவாகும். அவர்களின் கல்விக்காகவோ, கடல் தாண்டும் முயற்சிக்காகவோ, எதிர்பார்த்து காத்திருப்பவர்களுக்கு அது கைகூடும்.

இம்மாதம் குரு பார்வையைப் பலப்படுத்த குரு தட்சிணாமூர்த்தியை வியாழக்கிழமை தோறும், வழிபட்டு வாருங்கள். அதன் அருளால் அனைத்து காரியங்களும் சிறப்பாக நடைபெறும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

தனுசு இராசியில் பிறந்த பெண்களுக்கு இம்மாதம் இனத்தார் பகை மாறும். இயல்பாகவே, ஆரோக்கியம் சீராகும். குடும்பத்தினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள்.

கொடுக்கல், வாங்கல்கள் ஒழுங்காகும். மன அமைதி கிடைக்க மாலவனையும், வேலவனையும் வழிபடுவது நல்லது.

குழந்தைகளின் மீது கூடுதல் கவனம் செலுத்தினால், அதன் வளர்ச்சியில் ஏற்படும் இடையூறுகளைத் தடுக்க இயலும். பௌர்ணமி வழிபாடு பலன் தரும்.




**(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்)**

**வருமானம் திருப்தி தரும்!**

***ஆழ்ந்து யோசித்து செய்தால் அனைத்திலும் வெற்றி பெறலாம் என்ற கருத்தினை ஏற்று நடக்கும் மகர இராசி நேயர்களே!***

நீங்கள் நட்பால் நன்மை காண்பவர்கள். படிப்பைக் காட்டிலும், நடிப்பு உங்களுக்கு அதிகம் வரும். பணம் இருக்கும் பொழுது, மற்றவர்களைக் கண்டு கொள்ளமாட்டீர்கள். பணப்பற்றாக்குறை வரும்பொழுது மற்றவர்களிடம் சொல்லி அங்கலாய்ப்பீர்கள். நீங்கள் அமைதியான முகத்துடன் காட்சியளிப்பதோடு ஒரு காரியத்தில் இறங்கிவிட்டால் வெற்றியடையும் வரை ஓய மாட்டீர்கள்.

கார்த்திகை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, முதல் ஐந்து நாட்களில் விரயங்கள் கூடலாம். முத்தான வாழ்க்கையில் உடன் பிறப்புகள் ஒத்துழைப்பு குறையலாம். இருப்பினும், குரு மாற்றத்திற்கு பின் குழப்பங்கள் தீரும். இழப்புகளை ஈடுசெய்யும் வித்த்தில் ஏதேனும் ஒரு வழியில் வரவு வந்து சேரும்.

''சகோதரகாரகன்'' செவ்வாயை சனி பார்ப்பதால், சகோதரர்களின் உடல்நிலையில் திடீர் தொல்லைகள் உருவாகலாம். ஆரம்பத்திலேயே கவனித்துக் கொள்வது நல்லது. சுக்ர பலம் கூடுவதால், கொடுக்கல்-வாக்கல்கள் ஒழுங்காகும். பெண் குழந்தைகளின் வழியில் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும்.

மாதத் தொடக்கத்தில் அஷ்டமாதிபதி சூரியன் இலாப ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால், தந்தை வழியில் சில விரயங்கள் உருவாகலாம். அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகளில் தாமதம் ஏற்படலாம். எனவே, ஆதவன் வழிபாட்டிலும், அம்புலி வழிபாட்டிலும் ஆர்வம் செலுத்துங்கள். சாதனைகளை நிகழ்த்தும் விதத்தில் வாழ்க்கை அமையும்.

**மீனத்தில் சஞ்சரிக்கும் குரு!**

இதுவரை இரண்டாமிடத்திலும், மூன்றாமிடத்திலும் மாறிமாறி சஞ்சரித்து வந்த குருபகவான் இப்பொழுது, முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைக்கும் மூன்றாமிடத்தில் வலுவோடு சஞ்சரிக்கப் போகிறார். அப்புறம் என்ன? சகாயங்கள் ஒவ்வொன்றாக நடைபெறும். அதன் பார்வை பலத்தால் உங்கள் இராசிக்கு 7, 9, 11 ஆகிய இடங்கள் பலம் பெறுகின்றன. எனவே, களத்திர வழி ஒத்துழைப்பு கிடைக்கும். கல்யாண வாய்ப்புகள் வந்து கொண்டேயிருக்கும். தொழிலில் இலாபம் எதிர்பார்த்தபடியே வந்து சேரும். வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

இளைய சகோதரத்தின் உதவியால் ஏதேனும் ஒரு முயற்சியில் வெற்றி கிடைக்கும். பழைய பாக்கிகள் காலாவதியாகி விட்டதே என்ற கவலை இனி அகலும். கைமாற்று கொடுத்தவைகள் வந்து சேரும். கட்டடத்தைப் பிரித்துக் கொள்வதில் இருந்த தகராறுகள் மாறும். வாகனங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பழைய வாகனங்களைப் பைசல் செய்து விட்டு, புதிய வாகனங்களை வாங்க வேண்டுமென்ற எண்ணம் கைகூடும்.

**செவ்வாயின் தனசு இராசி சஞ்சாரம்!**

4,11 க்கு அதிபதியான செவ்வாய், விரய ஸ்தானம் எனப்படும் பன்னிரண்டாமிடத்தில் நவம்பர் 28 ஆம் திகதி சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக, எதிர்பாராத விரயங்கள் இல்லம் தேடி வரலாம். குறிப்பாக, பழைய சொத்துக்களைக் கொடுத்து விட்டு, புதிய சொத்துக்களை வாங்குவீர்கள். வீடு மாற்ற சிந்தனைகள் மேலோங்கும். தாய் வழியில் உள்ள உறவினர்களுக்கு சிறு தொகையைச் செலவிடுவீர்கள்.

இம்மாதம் சந்திர வழிபாடு உங்கள் சஞ்சலங்களைத் தீர்க்கும். திங்கள் அன்று வழிபடுவது சிறப்பு தரும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் பொருளாதார நிலை உயரும். பொறுப்புகளும், வேலைப்பளுவும் அதிகரிக்கும். மாத தொடக்கத்தில் குடும்பத்திற்கு தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். மீன குருவின் ஆதிக்கத்தால், சகோதர சச்சரவுகள் மாறும். ஆலய வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள். குடும்பத்தில் சுபச் செய்திகள் வந்து சேரும். கண்ணன் வழிபாடு கவலை போக்கும். (தொடரும்)

# இலங்கைத் தமிழர் விவகாரத்தில் கனடாவின் போக்கில் மாற்றம்

அண்மைக்காலமாக கனடா, இலங்கைத் தமிழர் விவகாரத்தில் பல காட்டமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. குறிப்பாக சீ- 49 என்ற சட்டம் பாராளுமன்றத்தில் முதற்கட்ட வாசிப்பிற்கு உட்படுத்தப்பட்ட பின்னர் பல பாரிய மாறுதல்கள் தெரிகின்றன.

குறிப்பாக தாய்லாந்தில் 350 க்கும் மேற்பட்ட அகதிகள் பலவந்தமாக தொகுதி தொகுதியாகக் கைது செய்யப்பட்டனர். இவர்களில் யு.என்.எச்.சீ.ஆர். அந்தஸ்துப் பெற்ற அகதிகளும் உள்ளனர். இதைவிட கொழும்பிலுள்ள கனேடியத் தூதரகத்தில் கனேடியப் பொலிஸார் சேவைகளை ஆரம்பித்துள்ளனர். இது ஒரு அசாதாரண நடைமுறையாகும்.

இதேபோல் கனேடிய உளவுத்துறையின் தலைவர் இந்தியா சென்று இந்தியாவின் மத்திய உளவுத்துறை றோ உளவு அமைப்பு போன்றவற்றோடு இலங்கைத் தமிழ் அகதிகள் வருவதை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என ஆராய்ந்துள்ளார்.

கனேடிய உளவுத்துறையின் முன்னாள் தலைவரான வாட் எல்கோக் என்பவர் இக்கப்பல் விவகாரங்கூளை கண்காணிப்பதற்கான அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். அதைவிட கனேடியப் பிரதமர் நேட்டோ அமைப்பிலுள்ள நாடுகள் கனடாவிற்கான கப்பல் அகதிகள் வருவதைக் கட்டுப்படுத்துவதற்கு உதவ வேண்டும் எனக் கேட்டுள்ளார்.

இவையாவும் கனேடியக் குடிவரவு அமைச்சர் சீ-49 சட்ட மூலம் சம்பந்தமாக தமிழர்களிற்கு அளித்த வாக்குறுதிகளிற்கு எதிரானவையாக உள்ளன. அவர் வாக்குறுதி வழங்கிய பின்னரே குறிப்பிட்ட சம்பவங்கள் அனைத்தும் இடம்பெற்றுள்ளன.

இச் சட்டமூலத்திற்கு ஆதரவு தெரிவித்துக் கடிதம் வழங்கிய பாலன் இரட்ணராஜா அமைச்சர் தங்களிற்கு உறுதிமொழி வழங்கிய விடயங்களைப் பற்றி தமிழ் வானொலியொன்றிற்குப் பேட்டியொன்றை வழங்கினார்.

அதில் அமைச்சர் மலேசியா, தாய்லாந்து மற்றும் இந்தோனேசியாவில் இருக்கும் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அகதிகளிற்கு யு.என். எச்.சீ.ஆரின் ஊடாக உதவுவதற்கு அவுஸ்திரேயா, மலேசியா, தாய்லாந்து இணைந்து நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துள்ளார். அத்துடன் இலங்கை அரசிற்கு இனப்பிரச்சினையைத் தீர்க்க கனேடிய அரசு அழுத்தம் கொடுக்குமென தெரிவிக்கப்பட்டதாகவும் அகதிகளுக்கெதிரான சட்டமூலமாக இது இருக்காது என்ற உறுதிமொழியும் தமக்கு அழிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். இது குடிவரவு அமைச்சர் இவ்விவகாரத்தில் இரட்டை வேடம் பூண்டு தமிழர்களை ஏமாற்றுவது போன்றே தெரிகிறது. (ஸ்ரீ)

# உடல் ஊனம் காரணமாக 8088 படையினர் ஓய்வு

போரின் போது ஏற்பட்ட உடல் ஊனம் காரணமாக 8ஆயிரத்து 88 படையினர் ஓய்வு பெற்றுக் கொண்டுள்ளதாக ஆளும் கட்சியின் பிரதம கொறடா தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.


உடல் ஊனத்தை காரணம் காட்டி ஓய்வு பெற்றுக்கொண்டவர்களில் பொலிஸ் உத்தியோகத்தர்களும் அடங்குவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதில் இராணுவத்தைச் சேர்ந்த 7ஆயிரத்து 337 பேரும், கடற்படையைச் சேர்ந்த 450 பேரும், விமானப்படையைச் சேர்ந்த 113 பேரும், பொலிஸ்துறையைச் சேர்ந்த 188 பேரும் இவ்வாறு ஓய்வு பெற்றுக் கொண்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறு ஓய்வு பெற்றவர்களினால் செய்யக் கூடிய வகையிலான புனர்வாழ்வு அளிக்கும் பொருட்டு தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# அரசின் ஒரு இலட்சம் ரூபா ஊக்குவிப்பு நிதியானது ஏமாற்று வேலையாகும்

## அனுரகுமார எம்.பி.தெரிவிப்பு



(கொழும்பு)

விதவைகளான இராணுவக் குடும்பங்கள் எவ்வாறு மூன்றாவது குழந்தையை பிரசவித்து அரசாங்கத்தின் ஒரு இலட்சம் ரூபா ஊக்குவிப்பு நிதியைப் பெற்றுக் கொள்ள முடியும்? என்று ஜனநாயக தேசியக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர் அனுர குமார திஸாநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

இன்னும் 19 அமைச்சுக்களுக்கு வரவு - செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கப்படவில்லை. சகல வளர்ப்புகளுக்கு தனித் தனி அமைச்சர்களை நியமித்துள்ள அரசாங்கம் தலைமையில் வளர்க்கவும் ஒரு அமைச்சரை நியமிக்க வேண்டும் எனவும் அவர் பரிகாசம் செய்தார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள ஜே.வி.பி.யின் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே அநுரகுமார திஸாநாயக்க எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

ஓய்வூதியத்தின் அதிகரிப்பையோ சம்பள உயர்வுகளையோ வழங்காது மூன்றாவது குழந்தையைப் பிரசவிக்கும் இராணுவக் குடும்பங் களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா வழங்குவதாக வரவு -செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

இது இராணுவத்தை ஏமாற்றும் வேலையாகும். நாட்டுக்காக உயிர்த் தியாகம் செய்த இராணுவக் குடும்பங்கள் எவ்வாறு மூன்றாவது குழந்தையை ஈன்றெடுக்க முடியும்? எனவே வழமையான ஏமாற்று வேலையை இம்முறையும் இராணுவத்திற்கு சலுகை எனக் கூறி அரசாங்கம் செய்துள்ளது.

அரசாங்கத்தின் அமைச்சர்கள் தொகை இன்னும் அதிகரிக்கும். தெங்கு உற்பத்திக்கு ஒருவர், சிறு ஏற்றுமதிப் பயிர்ச்செய்கைக்கு ஒருவர் பெருந்தோட்டத்திற்கு ஒருவர் என ஒரே வேலைக்கு தனித்தனி அமைச்சர்களை நியமித்துள்ள அரசாங்கம் எதிர்வரும் நாட்களில் இன்னும் பல அமைச்சர்களை நியமிக்கும் என்று கூறினார். (ஸ்ரீ-2)

# பாடசாலை சேவையில் ஈடுபட்டுள்ள வான் சாரதிகள் குறித்து தகவல் திரட்டல்

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை நடவடிக்கை

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்துச் சேவைகளில் ஈடுபட்டுள்ள வான் சாரதிகள் தொடர்பான பொலிஸ் அறிக்கை மற்றும் கைவிரல் அடையாளங்களைப் பெற்றுக்கொள்வதற்கான முறையொன்றைத் தயாரிப்பதற்குத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தீர்மானித்துள்ளது.

அகில இலங்கை பாடசாலைச் சிறுவர் போக்குவரத்து சங்க அங்கத்தவர்கள் நேற்று முன்தினம் காலை தம்முடன் பேச்சுவார்த்தை நடத்தியபோது இந்த முறைமை தொடர்பாக இருதரப்பும் இணக்கத்துக்கு வந்ததாகத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் சட்டத்தரணி அனோமா திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

பாடசாலை வான் சாரதிகளால் பாடசாலை மாணவர்களுக்கு ஏற்படுவதாகக் கூறப்படும் துன்புறுத்தல்களைத் தவிர்ப்பதற்கே இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுவதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை பாடசாலைச் சேவையில் ஈடுபடும் வான்களின் தரத்தை பரிசோதனையிடுவதற்கு மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பாடசாலை வான்களில் பயணம் செய்யும் மாணவர்களுக்கான காப்புறுதிச் செயற்றிட்டம் ஒன்றையும் சாரதிகளின் நலன் புரி தொடர்பான முறைமையொன்றையும் தயாரிக்க எதிர்பார்ப்பதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் கூறினார்.

கொழும்பு உட்பட நாடுமுழுவதிலும் பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்துச் சேவையில் 20ஆயிரம் வான்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# பொதுமக்களுக்கு தற்காலிக வீடுகள் அமைத்துக் கொடுக்கும் இராணுவத்தினர்

(கிளிநொச்சி)

இராணுவத்தினரால் கிளிநொச்சி மாவட்டத் தின் சகல கிராமங்களிலும் பொது மக்களுக்கு தற்காலிக வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

கணவனை இழந்த விதவைகளை கொண்ட குடும்பங்கள், ஊனமுற்றோர், ஆதரவற்றோர் மற்றும் வயோதிபர்களைக் கொண்ட குடும்பங்களிற்கும் இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் மண்ணால் ஆன தற்காலிக வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

தற்காலிக வீடுகளுக்கான மரங்கள், தடிகள் என்பனவும் இராணுவத்தினராலேயே வழங்கப்பட்டு இத் தற்காலிக வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

# கிளிநொச்சி இராமநாதபுரக்குளம் புனரமைக்கப்பட்டுள்ளது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இராமநாதபுரக்குளம் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

மஹிந்த சிந்தனையின் கீழ் அம்பாந்தோட்டை பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் பணிப்பிற்கமைய தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நீர்ப்பாசனத் திணைக்கள அனுசரணையுடன் இக்குளம் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

இக்குளத்தின் அணைக்கட்டு உயரமாக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக நீர் வெளியேறும் பகுதி அமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இக்குளத்திற்கு செல்லும் பாதைகள் அகலமாக்கப்பட்டுள்ளது.

இவ் அபிவிருத்தி பணிக்காக 10 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

# கட்டுரைப் போட்டியில் தேசியமட்டத்தில் முதலிடம்



(யாழ்ப்பாணம்)

ஹற்றன் நஷனல் வங்கியால் அண்மையில் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் யா/கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாலயத்தில் தரம் 10 இல் கல்வி பயிலும் மாணவியான செல்வி கீர்த்தனா விஜயகுமார் மத்திய பிரிவில் பங்குபற்றி தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார்.

இவரது சாதனையால் பாடசாலை சமூகம் பெருமையடைவதாக பாடசாலை அதிபர் எஸ்.இராமநாதன் தெரிவித்துள்ளார்.(ஸ்ரீ-2)

# ஞானச்சுடர் வெளியீட்டு விழா

(மருதங்கேணி)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயச்சூழலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினால் மாதம் தோறும் வெளியிடப்படும் "ஞானச்சுடர்" ஆன்மீக சஞ்சிகை கார்த்திகை மாத வெளியீடு நாளை வெள்ளிக் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வெளியிடப்படவுள்ளது.

இதன் வெளியீட்டுரையை அதிபர் ச.நவரத்தின ராசவேல், மதிப்பீட்டுரையை யாழ்.புதிய உயர் கல்லூரி விரிவுரையாளர் பண்டிதர் பொன்.சுகந்தன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (ஸ்ரீ-35)

# உள்ளூராட்சி தேர்தல் திருத்த சட்டமூலம் பற்றிய செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் உள்ள சிந்தனைக் கூடம் எனும் ஆய்வு அபிவிருத்திக்கான அமைப்பின் ஏற்பாட்டில் "அரசியலமைப்புக்கான 18 ஆவது திருத்தமும் உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல் திருத்தச் சட்டமூலமும்" எனும் தலைப்பிலான செயலமர்வு எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நாவலர் வீதியில் அமைந்துள்ள தியாகி அறக்கொடை நிறுவன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி செயலமர்வில் பிரதான உரையை ஜனநாயக உரிமைகளைக் காப்பதற்கான இயக்கத்தின் பணிப்பாளரும் பிரபல அரசியல் அமைப்புச் சட்ட வல்லுநருமான சட்டத்தரணி எஸ். ஜி.புஞ்சிகேவா நிகழ்த்தவுள்ளார்.

காலை,மாலை ஆகிய இரு அமர்வுகளாக இடம்பெறும் இச் செயலமர்வில் காலை 9.30 மணிக்கு அரசியலமைப்பு பற்றியும் பிற்பகல் 2.30 மணிக்கு உள்ளூராட்சி சட்டத் திருத்தங்கள் தொடர்பாகவும் உரைகள் இடம்பெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து விரிவான கலந்துரையாடல் நடைபெற்று மக்களின் அபிப்பிராய அறிக்கை தயாரிக்கப்பட்டு அதற்கான உரிய இடங்களுக்கு அனுப்பி வைக்கப்படுமென சிந்தனைக்கூட அமைப்பாளர் பேராசிரியர் இரா. சிவசந்திரன் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)



யாழ்.நகர் கிழக்கு சமூர்த்தி வங்கியின் ஆத்மீக அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் குருநகர் தொடர்மாடி முன்பள்ளியில் நடைபெற்ற சிறுவர் விழாவில் வங்கியின் முகாமையாளர் திருமதி வி.ஜெயசோதி சிறுமி ஒருவருக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

(படங்கள்:-கொழும்புத்துறை செய்தியாளர்)

# தாண்டிக்குளம் இராணுவமுகாமுக்கு முன்பாகவுள்ள வீதியால் போக்குவரத்து செய்ய அனுமதி

(பருத்தித்துறை)


வவுனியா தாண்டிக்குளம் இராணுவ முகாமுக்கு முன்னால் உள்ள வீதிகளின் போக்குவரத்துச் சேவைகள் தற்போது சீரடைந்துள்ளன.


நீண்டகாலமாக இவ் வீதியூடான போக்குவரத்து தடைப்பட்டு பக்கத்திலுள்ள வீதியால் வாகனப்போக்குவரத்து நடைபெற்று வந்தது.

தற்போது தாண்டிக்குளம் இராணுவ முகாம் முன்பாக வாகனங்கள் போக்குவரத்துச் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளன.

ஏ-9 வீதியில் தாண்டிக்குளத்திலும் மாங்குளத்திலும் இராணுவமுகாம் முன்பான வீதியில் போக்குவரத்து தடைப்பட்டிருந்தது.

எனினும் தாண்டிக்குளம் பாதை தற்போது சீரடைந்து போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதால் பயணிகள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-10)





யாழ். மாவட்டத்திலுள்ள சகல கூட்டுறவு சங்கத்துக்குமான கலந்துரையாடல் நேற்று முன் தினம் யாழ். வீர சிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதன் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட கூட்டுறவு பணியாளர்களையும் படங்க ளில் காணலாம்.

(படங்கள்:-எஸ்.கரன்)

# அமெ.கிறீன் அட்டை சீட்டிழுப்புக்கு 15 மில்லியன் பேர் விண்ணப்பம்

அமெரிக்க கிறீன் அட்டை சீட்டிழுப்பில் கலந்து கொள்வதற்காக இந்தவருடம் உலக ளாவிய ரீதியில் 15 மில்லியன் பேர் தம்மை பதிவு செய்து கொண்டுள்ளதாக அமெரிக்க வோல் ஸ்றீட் ஜேர்னல் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவில் சட்டபூர்வமாக நிரந்தரமாக வசிப்பதற்கான உரிமையை விரைவில் பெற்றுக் கொள்வதற்கு கிறீன் அட்டை சீட்டிழுப்பு வழிவகை செய்து தருகிறது.

இந்நிலையில் இச்சீட்டிழுப்பில் பங்கேற்பதற்கு கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இந்த வருடம் 25 சதவீதம் அதிகமானோர் விண்ணப்பித்துள்ளதாக அமெரிக்க இராஜாங்க திணைக்களம் தெரிவித்துள்ளதாக மேற்படி ஊடக செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கென்யா மற்றும் கஸகஸ்தானிலிருந்து அதிகளவு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சீட்டிழுப்பில் விண்ணப்பிப்பதற்கான இறுதி நாளாகிய கடந்த 3 ஆம் திகதி மணிக்கு 62 ஆயிரம் விண்ணப்பங்கள் இலத்திரனியல் முறைமை மூலம் அனுப்பப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (ஸ்ரீ-2)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு பெறுவோரின் ஆகக்குறைந்த வயது 21 ஆக நிர்ணயம்

## அமைச்சர் டிலான் தெரிவிப்பு

(கொழும்பு)

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெறுவதற்கான ஆகக் குறைந்த வயதெல்லை 21 ஆக இருக்க வேண்டும் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாடு மற்றும் நலன்புரி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

இளைஞர் விவகார மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சும் வெளிவிவகார அமைச்சும் இணைந்து வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்பவர்களுக்கான பயிற்சித் திட்டம் ஒன்றை ஆரம்பிக்க உள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதத்தின் போது உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். (ஸ்ரீ-2)




வடமராட்சி லயன்ஸ் கழகத்தினால் 2010 ஆம் ஆண்டுக்கான பதவியேற்பு வைபவம் அண்மையில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் வைத்திய கலாநிதி லயன் வை.தியாகராசா சிறப்புரை யாற்றுவதை படத்தில் காணலாம்.

(படங்கள் :- மருதங்கேணி செய்தியாளர்)

# பிறப்பு வீதத்தை அதிகரிக்கும் நோக்கிலேயே இராணுவ குடும்பத்தினருக்கு சலுகைகள்

## அமைச்சர் பீலிக்ஸ் தெரிவிப்பு

சிறிய குடும்பம் பொன்னானது எனக் கூறி பிறப்பு வீதம் நாட்டில் குறைவடைந்தது. இதனை நிவர்த்தி செய்வதற்காக இராணுவ வீரர்களுக்கு பிறக்கும் மூன்றாவது பிள்ளைக்கு ஒரு இலட்சம் ரூபா வீதம் வழங்க வரவு-செலவு திட்டத்தில் யோசனையை ஜனாதிபதி முன்வைத்துள்ளமை நாட்டுக்கு நன்மை பயக்கும் என அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வரவு-செலவு திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா இதனைத் தெரிவித்துள்ளார்.

நாம் நம்மையே ஏமாற்றிக் கொள்ளாத வகையில் நாடு முழுவதும் அபிவிருத்திகளையும் மக்கள் மேம்பாட்டுத் திட்டங்களையும் உள்ளடக்கியே ஜனாதிபதி வரவு-செலவு திட்டத்தை முன் வைத்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் கல்வியை முதலீடாக மேம்படுத்தியுள்ளனர். அதனைப் போன்ற திட்டங்களும் வரவு -செலவு திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி சிறந்த பௌத்தர். பொருளாதார நிர்வாகி. யுத்தத்தை முடிக்க முடியாதென்றார்கள். ஆனால் இன்று யுத்தத்தை முடித்து வடக்கு அபிவிருத்தி செய்யப்படுகிறது.

நாட்டில் இளம் சந்ததியினரின் அதிகரிப்பு குறைந்துள்ளது.முதியோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. சிறிய குடும்பம் பொன்னானது எனக்கூறி பிறப்பு வீதம் குறைந்துள்ளது. எனவே இராணுவ குடும்பத்தில் மூன்றாவது பிள்ளை பேற்றுக்கு ஒரு இலட்சம் ரூபா வழங்க ஜனாதிபதி வரவு-செலவு திட்டத்தில் யோசனைகளை முன்வைத்துள்ளார் எனக் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

# இராணுவத்தினரால் மருத்துவ சிகிச்சை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இராமநாதபுரம் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் இயங்காத நிலையில் இப்பிரதேச இராணுவத்தினரால் பொது மக்களுக்கான மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன.

இதில் சாதாரண நோய்கள், காய்ச்சல், காயங்களுக்கான சிகிச்சை போன்ற மருத்துவப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் பெருமளவான பொதுமக்கள் இங்கு சிகிச்சை பெறுவதனையும் அவதானிக்க முடிகின்றது. (ஸ்ரீ)

# மனித உரிமை தினத்தையொட்டி நாடு தழுவிய கட்டுரைப்போட்டி

(அல்வாய்)

மனித உரிமை தினத்தையொட்டி இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு மற்றும் கல்வியமைச்சின் ஒத்துழைப்புடன் நடத்தப்படும். நாடு தழுவிய கட்டுரைப் போட்டி சிங்களம் , தமிழ் , ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளில் பாட சாலை மாணவர்களிடையே மொழிகளில் நடத்தப்படவுள்ளது.

''சிறுவர்களுக்கு தற்போது அமுலில் உள்ள சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு போதுமானதா?'' என்ற தலைப்பில் கட்டுரைகள் அமைதல் வேண்டும்.

இப்போட்டி க.பொ.த.(உ/த) -சிரேஷ்ட பிரிவு , தரம் 9 -11 வரை கனிஷ்ட பிரிவு என இரு பிரிவுகளில் நடைபெறும். கனிஷ்ட பிரிவினர். 1,500 சொற்களுக்கு குறையாமலும் சிரேஷ்ட பிரிவு மாணவர்கள் 2 ,000 சொற்களுக்கு குறையாமலும் எழுதுதல் வேண்டும்.

இதற்கான பரிசில்களாக முதலாம் இடத்திற்கு 25 ஆயிரம் ரூபா , இரண்டாம் இடம் 20 ஆயிரம் , மூன்றாம் இடம் 15 ,000 ரூபா என வழங்கப்படவுள்ளது.

மும்மொழியில் இருந்தும் கனிஷ்ட ,சிரேஷ்ட பிரிவுகளில் இருந்து சிறப்பான பத்து ஆக்கங்களுக்கு ரூபா 5 ,000 வீதம் 30 ஆறுதல் பரிசில்கள் வழங்கப்படும்.

எல்லா வெற்றியாளர்களுக்கும் பெறுமதியான சான்றிதழ்கள் வழங்கப்படும்.

எல்லா ஆக்கங்களும் அதிபரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும் என்பதுடன் போட்டியாளர்களின் பெயர் ,பாடசாலை முகவரி , வதிவிட முகவரி என்பன ஆங்கிலத்தில் எழுதி தனியான தாளில் அதிபரினால் உறுதிப்படுத்தி இணைத்து அனுப்பப்படல் வேண்டும்.

இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவில் பணிபுரிபவர்களின் நெருங்கிய உறவினர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

எல்லா ஆக்கங்களும் தலைவர் , அகில இலங்கை கட்டுரைப் போட்டி 2010/2011 , இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு , மனித உரிமைகளை பாதுகாப்பதற்கான திட்டம் , இல.129 மேல் நீதிமன்ற கட்டடத் தொகுதி , புதுக்கடை , கொழும்பு 12 என்ற முகவரிக்கு எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன் அனுப்பப்படல் வேண்டும் என வடமாகாண மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் மு.இராதா கிருஷ்ணன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-19)

# யுத்தத்தால் பாதிப்புற்ற பிரதேசங்களின் அபிவிருத்திக்கு தனியான அமைச்சு அவசியம்

## த.தே.கூட்டமைப்பு தெரிவிப்பு

கடந்த மூன்று தசாப்த கால யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் அபிவிருத்திக்குத் தனியான அமைச்சு ஒன்று ஏற்படுத்தப்படுமெனத் தாம் எதிர்பார்ப்பதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு- செலவுத்திட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் இதனைத் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் துரித அபிவிருத்திக்கான தனியான அமைச்சு ஏற்படுத்தப்பட்டு இம்முறை வரவு- செலவு திட்டத்தின் ஊடாக நிதி ஒதுக்கீடு செய்யப்படுமெனத் தாம் எதிர்பார்ப்பதாக அவர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-2)

பணத்திற்காகவும் புகழுக்காகவும் வெற்றிக்காகவும் என்னுடைய ஆன்மாவை நான் விற்பதில்லை. – நாராயணமூர்த்தி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# வெறும் புகழ்பாடும் வீணராய்ப் போவீரோ!

மன்னவனும் நீயோ ! வளநாடும் உன்னதோ, உன்னையறிந்தோ தமிழை ஓதினேன். இவ்வாறு சோழ மன்னனைப் பார்த்து மிடுக்குடன் கேட்டவன் கம்பன்.

கம்பராமாயணம் சுவை நிறைந்த காவியமாக இருப்பதற்கும் கம்பனின் துணிவே அடிப்படைக் காரணம் எனலாம்.

அறிவு என்பது இந்த உலகில் மிகவும் உயர்ந்தது. அந்த அறிவு மெய்யறிவாக மெய்ஞ்ஞான அறிவாக மாறவேண்டுமாயின் அறிவுடையவர்களிடம் நேர்மையும் உள்ளதை உள்ளவாறு கூறும் துணிவும் இருக்கவேண்டும்.

அறிவுடையவர்கள் துணிவில்லாதவர்களாக இருப்பார்களாக இருந்தால் இந்த உலகம் அழியும், அசிங்கப்படும். பெரியவர்கள் அவமதிக்கப்படுவார்கள். சிறியவர்கள், நேர்மையற்றவர்கள், ஊழல் புரிந்தவர்கள், மோசக்காரர்கள் புகழ் மாலை சூடுவர்.

இந்த அநியாயநிலையை இப்போது யாழ்ப்பாணத்தில் தாராளமாகக் காணலாம்.

உள்ளொன்று வைத்து புறமொன்றுபேசும் கலாசாரம், பொய்யுரைத்தல், புகழுக்காக எப்படியும் புகழ் பாடுதல் இப்படியாக ஒரு சமூகம் யாழ்ப்பாணத்தில் உருவாகியமை வேதனைக்குரிய விடயமே.

என்ன செய்வது; கற்றவர்கள் கயவர்களாக இருந்தால் இந்த உலகம் தாங்காது என யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த தவத்திரு குன்றக்குடி அடிகளார் கூறியதை நினைக்கும் போது கன்னத்தின் ஓரங்கள் நனைகின்றன.

தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் எதிர்வு கூறலின் தீர்க்கதரிசனம் ஐயா! அதைத் தடுக்கயாது வழியோ என்று மனம் ஏங்குகிறது. அந்தளவிற்கு பொய்மையாளரை புகழ்பாடும் கோழைத்தனங்கள் அரங்கேறுகின்றன.

இத்தகைய கயமைத்தனங்கள் இந்த மண்–தமிழினம் விமோசனம் அடைவதற்கு ஒருபோதும் உதவாது.

எனவே எனதருமைத் தமிழினமே, நேர் கொண்ட பார்வை, நிமிர்ந்த நன்னடை, நிலத்தில் யார்க்கும் அஞ்சாத திமிர்ந்த ஞானச்செருக்குக் கொண்ட யாழ்ப்பாணத் தமிழ் இனத்தின் பெருமையை அற்ப சொற்ப காட்சிகளுக்காக விற்றுவிடாதீர்கள். உங்கள் அறிவால், ஆளுமையால் மட்டுமே தமிழினம் தலைநிமிர முடியும்.

தயை கூர்ந்து தவறை தவறெனச் சுட்டிக் காட்டுங்கள். சரியை சரியெனக் கூறுங்கள். நியாயம், நீதி, தர்மம் இவற்றை நிலைநிறுத்தப் போதியுங்கள்.

இந்தியாவின் பிரதமராக இருந்த ஜவகர்லால் நேரு கூறுகிறார், அறத்தை மறந்தவன் அழிவது உறுதி என்று. எனவே அறம் தழைத்தோங்க உங்கள் அரும்பணி தேவை.

அங்கும்பாடி இங்கும் பாடி வாழலாம். ஆனால் அது என்றோ ஒருநாள் உங்கள் வாழ்க்கையில்– உங்கள் பணியில் பங்கமாக உதைக்கும். அப்போதுவேதனைதான் மிஞ்சும் .

அந்த நேரத்தில் உங்களை தாங்கிப்பிடிக்க அந்த ஆண்டவனும் மறந்து போவான்.

# தமிழ்க் கட்சிகளின் அரங்கம் கிருஷ்ணாவை சந்தித்துப் பேசும்

(கொழும்பு)

தமிழ்க் கட்சிகளின் அரங்கம் ஜனாதிபதி மற்றும் இந்தியத் தூதுவர் ஆகியோரை எதிர்வரும் தினங்களில் சந்தித்து உரையாடவுள்ளதாக நம்பகமான தகவல் மூலம் தெரியவந்துள்ளது.

அதன் பிரகாரம் எதிர்வரும் வியாழக்கிழமை ஜனாதிபதியையும், வெள்ளிக்கிழமை இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணாவையும் சந்தித்து உரையாடவுள்ளனர்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் இன்று இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

பிரஸ்தாப பேச்சுவார்த்தைகளின்போது இனப்பிரச்சினைக்கான தீர்வு மற்றும் வடக்கு–கிழக்கு மக்களின் இயல்பு வாழ்க்கை என்பன குறித்தே .பேசப்படும் என்பதாக தெரியவந்துள்ளது.

வடக்கு, கிழக்கு மக்களின் மீள்குடியேற்றப் பிரச்சினைகள், அர்த்தமுள்ள வகையிலான மீள்குடியேற்றம், வட–கிழக்கு அபிவிருத்தி தொடர்பிலான முன்னுரிமை, அப்பிரதேசங்களில் இயல்பு வாழ்க்கை மற்றும் சிவில் நிர்வாகத்தை கட்டியெழுப்புதல், இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பிலான கலந்துரையாடல்கள் என்பவற்றை வலியுறுத்திய எழுத்து மூலமான கோரிக்கை ஒன்றும் பேச்சுவார்த்தையின் போது கையளிக்கப்படவுள்ளது.

இவ்விடயங்களில் இந்தியாவின் காத்திரமான பங்களிப்பைக் கோரும் வேண்டுகோள் இந்திய வெளிவிவகார அமைச்சருடனான சந்திப்பின்போது கோரப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (ச–5)

## புதிய அமைவிட திறப்பு விழா

(பருத்தித்துறை)

சம்பத் வங்கியின் நெல்லியடி பிரதேச வங்கிக்கிளையின் புதிய அமைவிடத் திறப்புவிழா நாளை காலை 7.30 மணியளவில் இல.169 ,யாழ்.வீதி, நெல்லியடி என்ற முகவரியில் இடம்பெறவுள்ளது.(ச–7)

## உதைபந்தாட்ட இறுதிப்போட்டி

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட 13 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்ட இறுதிப் போட்டிகள் இன்று காலை 9 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இப்போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் மோதவுள்ளன. இதேவேளை மூன்றாம் இடத் தெரிவுக்கான போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும், ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயமும் மோதவுள்ளன.(ச–47 ,7)

## கைத்தொழில் அதிகார சபையின் பரீட்சை மண்டப இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையினால் கோரப்பட்ட விற்பனை ஊக்குவிப்பு முகாமையாளர் பதவிக்கான தெரிவுப் பரீட்சை எதிர்வரும் 27 ம் திகதி சனிக்கிழமை காலை 10.00–12.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இப்பரீட்சை யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறுமென அறிவிக்கப்பட்ட போதிலும் தவிர்க்க முடியாத காரணத்தினால் இடம்மாற்றப்பட்டு யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப்பீட மற்றும் முகாமைத்துவ பீட பரீட்சை மண்டபத்தில் நடைபெறும் என்பதனைப் பரீட்சார்த்திகள் கவனத்தில் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சை இலங்கை திறந்த பல்கலைக்கழகமூடாக நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## தீயணைப்பு பிரிவினரின் பணி மகத்தானது!

### யாழ். மாநகரசபை முதல்வர் புகழாரம்

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் தீயணைப்புப் பிரிவினைக் கொண்டுள்ள மாநகர சபை யாழ் மாநகரசபை மட்டும்தான் என யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

யாழ்.மாநகர சபையில் தீயணைப்புப் பிரிவில் 24 வருடங்களாக பணிபுரிந்து ஓய்வு பெற்ற எஸ்.ஆனந்தராசாவின் பிரிவுபசார நிகழ்வு நேற்று யாழ். மாநகர சபை தீயணைப்பு பிரிவு அலுவல கத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தீயணைப்புப் பிரிவின் பணிகள் நாட்டில் முக்கியமானது. யாழ்.மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவு ஆரம்ப காலத்தில் இருந்து இன்றுவரை பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகிறது.

தீயணைப்புப் பிரிவினரால் மாநகர சபைக்கு வருமானம் கிடைப்பதில்லை. மக்களின் தேவைகளினை கருத்தில் கொண்டு மட்டுமே இயங்கிவருகிறது.

இவைதவிர தீயணைப்புப் பிரிவுக்கு போதியளவு வாகன வசதிகள் இல்லை. இதனால் அவர்களின் பணியை துரிதமாக மேற் கொள்ள முடியாது சிரமப்படுகின்றனர்.

தீயணைப்புப் பிரிவில் அனுபவம் வாய்ந்தவர்களின் பங்களிப்பு அவசியமானது. இத்தகைய நிலையில் நான் திரு. ஆனந்தராஜாவிடம் கேட்டுக் கொள்வது உங்கள் சேவையை நீடிக்கவேண்டும்.

மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கே மாநகரசபை உள்ளது. அதன் ஒரு அங்கமாக தொழிற்படும் தீயணைப்புப்பிரிவின் பணியும் பாராட்டத்தக்கது என அவர் மேலும் தெரிவித்தார். (ச–6)

## திருட்டுத்தனமாக கள்ளு விற்றவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

சங்கானை மது வரித் திணைக்களத்தினரால் அனலைதீவுப் பகுதியில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட திடீர் முற்றுகையின்போது கள்ளினை தவறணைக்கு வழங்காது திருட்டுத்தனமாக விற்பனை செய்த 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்திய போது ஒவ்வொருவருக்கும் தலா ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் அறவிட்டு எச்சரிக்கை செய்தபின் விடுதலை செய்யப்பட்டனர். (எ–7 ,47)

# இருளை விரட்டிய– பாபா

திரை உலக நட்சத்திரமாக திகழ்ந்த அஞ்சலி தேவி. தனது வாழ்நாளில் பகவான் பாபாவால் தனக்கு அருளப்பட்ட அற்புதத்தை இப்படி விபரிக்கின்றார்.

நானும் எனது கணவன் ஆதி நாராயணனும் இணைந்து பல படங்களை தயாரித்து கொண்டிருந்தோம். பேரும், புகழும், செல்வமும் தேடிவர வாழ்க்கை இனியையாய் போய்க் கொண்டிருந்தது. ஒளிமயமாய் இருந்த எங்கள் வாழ்க்கையில் திடீரென இருள் சூழ ஆரம்பித்தது. தயாரித்த படங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் தோல்வியைத் தழுவின. நாங்கள் நம்பியவர்கள் மோசம் செய்தார்கள். நெருக்கடியான நிலைமையில் செய்வதறியாது திகைத்து நின்றோம்.

எமது கஷ்டத்தை புரிந்து கொண்ட எங்கள் உற்ற நண்பர் நடிகர் நாகையா எங்களுக்கு ஆறுதல் சொல்லி ஆழ்வார் பேட்டையில் உள்ள திருவெங்கடமுனி அவர்களின் இல்லத்திற்கு வருகை தந்திருக்கும் பகவான் சத்தியசாயி பாபாவை காண அழைத்துச் சென்றார். சுவாமி எங்களைக் கண்டதும் பல நாட்கள் பழகியவர் போல் பெயர் சொல்லி அழைத்து ஒரு அறையில் இருக்கச் சொன்னார். சிறிது நேரத்தின் பின் ஒளி பொருந்திய வதனத்துடன், கருணை ததும்பும் கண்களுடன் உள்ளே நுழைந்தார் பாபா. ''நீங்கள் மிகவும் பயந்துவிட்டீர்கள். எதற்கும் அஞ்சவேண்டாம். நானிருக்கும் போது எந்த பயமும் தேவையில்லை. உங்கள் இதயங்கள் தூய்மையானவை. நீங்கள் யாருக்கும் கெடுதல் நினைக்கவில்லை. உங்கள் நண்பர்கள் உங்களை மோசம் செய்து விட்டார்கள் இந்தக் கஷ்டங்கள் கடந்து செல்லும் மேகங்கள். அவை விலகி ஒளிவீசும். நான் இருக்கிறேன்'' என்றார். அந்த அன்புப் பிரவாகத்தில் திக்குமுக்காடிப்போன எங்களால் ஆனந்தக் கண்ணீரையே காணிக்கையாக கொடுக்க முடிந்தது.

சில மாதங்களின் பின்பு வாழ்வில் மீண்டும் வசந்தம் தொடங்கியது. இக்கால வேளையில் மீண்டும் சுவாமியை சந்திக்கும்வாய்ப்பு ஏற்பட்டது. அப்போதுசுவாமி ''படங்கள் தயாரிக்கவில்லையா? என்று கேட்டார்'' ''அடைந்த நஷ்டங்களுக்கு பிறகு படம் எடுக்க தைரியம் வரவில்லை சுவாமி'' என்றோம். ''நஷ்டம் அடைந்த இடத்திலேயே இலாபத்தை ஈட்டு. மீண்டும் படங்களைத் தயார் செய்'' என்றார். சுவாமியின் திருவாக்குப்படி, சதிசக்குப்பாய், சதிசுமதி, சதி அனுசுயா, பக்ததுக்காரம் போன்ற வெற்றிப்படங்களை வெளியிட்டோம். இதன்பிறகு எங்கள் வாழ்வு ஓகோ என்று ஓங்கியது. பகவானே எங்களுக்கு சரியான முடிவுகளை எடுத்து வழிகாட்டுகிறார்.



ஜெய் சாய்ராம் யாதவன்

# கொரிய தீபகத்தில் போர் மூளும் அபாயம்; தென்கொரியாவுக்கு உதவ அமெ.முன்வருகை



(நியூயோர்க்)

வடகொரியா - தென்கொரியா இடையே கடந்த 1952 ஆம் ஆண்டு தொடக்கம் கடல் எல்லை தொடர்பாக பிரச்சினை இருந்து வருகிறது.

இதைத் தொடர்ந்து இருநாடுக ளுக்கும் இடையே அவ்வப்போது மோதல்கள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் நேற்று முன்தினம் தென்கொரியாவின் பியோன்டாயோஸ் தீவின் மீது வடகொரியா இராணுவம் திடீரென பீரங்கித் தாக்குதல் நடத்தியது. அப்போது 50 குண்டுகள் சரமாரியாக வீசப்பட்டன.

பதிலுக்கு தென்கொரியா இராணுவம் 80 தடவை துப்பாக்கியால் சுட்டனர்.

இதனால் இருநாடுகளிடையே போர் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதற்கிடையே வடகொரியாவின் தாக்குதலுக்கு அமெரிக்காவும் ரஷ்யாவும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இவ் இருநாடுகளுக்கு இடையே ஏற்பட்டுள்ள போர் பதற்றம் காரணமாக அமெரிக்க அதிபர் ஒபாமா வெள்ளை மாளிகையில் உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

அதைத் தொடர்ந்து செய்தி நிறுவனத்துக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறுகையில்,

தென்கொரியா மீது வடகொரியா இராணுவம் குண்டுவீச்சு நடத்தியது கண்டிக்கத்தக்கது. இது தென்கொரியாவுக்கு அச்சுறுத்தல்களை ஏற்படுத்தியுள்ளது.

தென்கொரியா அமெரிக்காவின் முக்கியமான நட்புநாடு. பசுபிக் மண்டலத்தில் அமெரிக்க பாதுகாப்புக்கு முக்கிய பங்கு வகிக்கிறது.

எனவே, தென்கொரியாவுக்கு அமெரிக்கா பாதுகாப்பு வழங்கும். அதில் நாங்கள் மிகவும் உறுதியாக இருக்கிறோம்.

இப்பகுதியில் அச்சுறுத்தல் நீங்கி அமைதி நிலவ வேண்டும். சர்வதேச விதிமுறைகளை மீறக்கூடாது என தனது நட்பு நாடான வட கொரியாவுக்கு சீனா வலியுறுத்த வேண்டும் என ஒபாமா கூறினார்.


அத்துடன் தென்கொரியாவில் அமெரிக்கா 28 ஆயிரம் இராணுவ வீரர்களை ஏற்கனவே நிறுத்தி வைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே தென்கொரியா மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு ஐ.நா. சபை பொதுச் செயலாளர் பான் கீ மூனின் செய்தி தொடர்பான பர்கான் காப் கண்டனம் தெரிவித்துள்ளார்.

மேலும் இங்கிலாந்து, ஜப்பான் நாட்டு தலைவர்களும் இதற்கு கண்டனம் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)




# இங்கிலாந்து இளவரசர் வில்லியமுக்கு அடுத்த ஆண்டு ஏப்ரலில் திருமணம்



(லண்டன்)

இங்கிலாந்து இளவரசர் சார்ள்ஸ் - டயானா தம்பதியின் மூத்த மகன் இளவரசர் வில்லியம் (28) நீண்ட நாட்களாக கேத் எட்டில்டன் (28) என்ற பெண்ணை காதலித்து வருகிறார்.

சமீபத்தில் இவர்களின் திருமணம் அறிவிக்கப்பட்டது. ஆனால் இவர்களின் திருமணத் திகதி அறிவிக்கப்படாமல் இருந்தது. இந்த நிலையில் இவர்களது திருமணம் அடுத்த ஆண்டு ஏப்ரல் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும் என நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பை இளவரசர் வில்லியமின் தனிச் செயலாளர் ஜாமி லோதர் பிங்கர்டன் தெரிவித்துள்ளார்.


இவர்களின் திருமணம் மத்திய லண்டனில் உள்ள வெஸ்ட் மின்ஸ்டர் அப்பே கிறிஸ்தவ தேவாலயத்தில்நடைபெறும். இத்தேவாலயமானது ஆயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்தது.

இங்குதான் தற்போதைய ராணி எலிசபெத்தின் திருமணம் கடந்த 1947 ஆம் ஆண்டு நடந்தேறியது.மேலும் பிரான்ஸ் தலைநகர் பாரிசில் நடந்த கார் விபத்தில் மரணம் அடைந்த இளவரசர் வில்லியமின் தாயார் டயானாவின் இறுதிச்சடங்கும் இங்குதான் நடந்தது.

எனவேதான் தனது திருமணத்தை இங்கு நடத்த இளவரசர் வில்லியம் முடிவு செய்ததாக கூறப்படுகிறது. திருமணத் திகதி அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து அரச குடும்பத்து திருமண விழாவை வரவேற்க இங்கிலாந்து மக்கள் ஆர்வத்துடன் இப்போதே தயாராகிவிட்டனர்.

மேலும் திருமண ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற ஆரம்பித்துள்ளதாகவும் இதற்கான பணிகளில் அரச குடும்பத்தினர் இப்போதே இறங்கி விட்டனர் எனக் குறிப்பிடப்படுகின்றது. (ஸ்ரீ-2)

# ஒபாமா இரண்டாவது முறை அதிபராவதற்கு எதிர்ப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் அண்மையில் இடைத் தேர்தல் இடம் பெற்றது. இதில் ஆளும் ஜனாதிபதி ஒபாமாவின் ஜனநாயக கட்சி தோல்வி பெற்றது. இதைத் தொடர்ந்து கடந்த 8 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை ஜனாதிபதி ஒபாமாவின் செல்வாக்கு குறித்து மக்களிடையே கருத்து வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

அதில் வோஷிங்டன் டைம்ஸ் பத்திரிகை நடத்திய வாக்கெடுப்பில் ஒபாமாவுக்கு எதிராக 49 சதவீதம் பேர் வாக்களித்தனர்.அவர்கள் எதிர்வரும் 2012 ஆம் ஆண்டு மீண்டும் அவர் ஜனாதிபதியாகக் கூடாது என தெரிவித்தனர். 41 சதவீதம் பேர் மட்டுமே அவர் மீண்டும் ஜனாதிபதியாக வர ஆதரவளித்துள்ளனர்.

அதேபோல குன்னிபியாக் பல்கலைக்கழகத்தின் தேர்தல் பிரிவு மாணவர்கள் நாடு முழுவதும் தொலைபேசி மூலம் கருத்து வாக்கெடுப்பு நடைபெற்றது. 2 ஆயிரத்து 242 பேரிடம் நடத்திய வாக்கெடுப்பிலும் இதே கருத்துத்தான் நிலவியது.

இதன் மூலம் ஜனாதிபதி ஒபாமாவின் செல்வாக்கு குறைந்துள்ளது என்பது தெரிய வந்துள்ளது. இதற்கிடையே எதிர்க்கட்சியான குடியரசு கட்சியைச் சேர்ந்த மிட் ரோம்னி, மிக் ஹீகாய ஆகியோர் ஒபாமாவுக்கு போட்டியாக திகழ்கின்றனர்.

அதே நேரத்தில் கட்சி சார்பற்ற பொது வேட்பாளர்கள் இன்னும் எந்தவித முடிவுக்கும் வரவில்லை., எதிர்வரும் 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவு வழங்குவது பற்றி முடிவு செய்யவில்லை எனக் கூறப்படுகிறது. (ஸ்ரீ-2)

# மக்கள் தொகை குறைவதால் ஈரான் அதிரடி நடவடிக்கை

ஈரானில் பெண்கள் 16 வயதிலும், ஆண்கள் 20 வயதிலும் திருமணம் முடித்து கொள்ள வேண்டும் என அந்நாட்டு ஜனாதிபதி முகமது அகமதி நிஜாத் வலியுறுத்தியுள்ளார்.

கடந்த 1979 இல் ஈரானில் இஸ்லாமிய புரட்சி ஏற்பட்ட பின் மக்கள் தொகை அதிகரித்தது. அதையடுத்து அங்கு குடும்பக்கட்டுப் பாட்டு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. 1990 இல் இருந்து அங்கு மக்கள் தொகை குறைந்து கொண்டே வருகிறது.

ஈரான் ஜனாதிபதி அகமதி நிஜாத் குடும்பக் கட்டுப்பாட்டு திட்டம் என்பது பாவமான செயல். மேற்கிலிருந்து இறக்குமதியான திட்டம் என்று விமர்சித்துள்ளார்.இந்நிலையில் கடந்த 22 ஆம் திகதி அவர் நம் நாட்டில் பெண்கள் 16 அல்லது 17 வயதிலும், ஆண்கள் 20 வயதிலும் திருமணம் செய்து கொள்ள வேண்டும். தற்போது ஆண்கள் 26 வயதிலும், பெண்கள் 24 வயதிலும் மணம் செய்து கொள்கின்றனர். இவ்வளவு தாமதமாக மணம் செய்து கொள்வதற்கு காரணம் எதுவுமில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.


கடந்த 2005 இல் அதிபராக பதவியேற்ற பின் நாட்டின் மக்கள் தொகையை பெருக்குவதில் அவர் ஈடுபட்டுள்ளார். தற்போது ஈரானில் 15 இல் இருந்து 30 வயதிற்குள் ஏழரை கோடி பேர் மட்டுமே உள்ளனர்.

உலகின் மூன்றாவது இளமை நாடு ஈரான் ஆகும். இந்தாண்டு ஜூலையில் புதிதாகப் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைக்கும் ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தை அவர் அறிமுகப்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)



ரஷ்யாவுக்கு விஜயம் மேற்கொண்ட பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனாவை (இடது),அந்நாட்டு பிரதமர் விளாடிமிர் புடின் தலைநகர் மொஸ்கோவில் கைலாகு கொடுத்து வரவேற்பதை படத்தில் காணலாம்.

# மழையால் இரண்டாம் நாள் ஆட்டம் பாதிப்பு
# சங்கக்கார சதம்; சமரவீர ஆறுதல்
# இலங்கை கௌரவமான நிலையில்



(கொழும்பு)

குமார் சங்கக்கார சதம் அடித்து அசத்த சரிவிலிருந்து மீண்ட இலங்கை அணி நேற்று மழை காரணமாக இரண்டாம் நாள் ஆட்டம் இடை நிறுத்தப்பட்டபோது முதல் இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்களை இழந்து 294 ஓட்டங்களை எடுத்தது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி மூன்று டெஸ்ட் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் காலியில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிபடைந்த நிலையில் இரண்டாவது டெஸ்ட நேற்று முன் தினம் கொழும்பு ஆர்.பிரேமதாஸ விளையாட்டரங்கில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நேற்று முன்தினம் முதல் நாள் ஆட்ட நேர முடிபில் 3 விக்கெட்டுகளை இழந்து 84 ஓட்டங்களை எடுத்தது.

இந்நிலையில் 2 ஆம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு சங்கக்கார –சமரவீர ஜோடி பொறுப்பான இணைப்பாட்டத்தை வழங்கி அணியை சரிவிலிருந்து மீட்டெடுத்தனர்.

இதில் திலான் சமரவீர 103 பந்துகளிலும் குமார் சங்கக்கார 141 பந்துகளிலும் அரைச் சதம் கடந்து அசத்தினர்.

இந்த ஜோடியைப் பிரிக்க மேற்கிந்தியத் தீவுகளின் அணித்தலைவர் சமி களத்தடுப்பில் பல வியூகங்களை வகுத்தும் பலனளிக்காமல் போக இலங்கை அணி 200 ஓட்டங்களை எட்டியது.

இதில் அணித்தலைவர் குமார் சங்கக்கார 216 பந்துகளில் தனது 24 ஆவது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்து கைகொடுத்தார்.

இந்த ஜோடி 4 ஆவது விக்கெட்டுக்காக 170 ஓட்டங்களைஇணைப்பாட்டமாக பகிர்ந்த போது திலான் சமரவீர 170 பந்துகளில் (8 பவுண்டரிகள் ஒரு சிக்ஸர் உட்பட) 80 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த அஞ்சலோ மத்தியூஸ் சிறப்பான ஆட்டத்தை வழங்க இலங்கை அணி 250ஓட்டங்களை தொட்டது.

எனினும் அஞ்சலோ மத்தியூஸ் 40 பந்துகளில் (ஒரு பவுண்டரி ஒரு சிங்ஸர் உட்பட) 25 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய பிரசன்ன ஜயவர்த்தன நிதானமாகத் துடுப்பெடுத்தாடி நம்பிக்கையளித்தார்.

இந் நிலையில் நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் தேநீர் இடைவேளைக்கு முன்னர் மழையின் குறுக்கீட்டால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

எனினும் மழை தொடர நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டம் இடைநிறுத்தப்பட்ட போது இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்களை இழந்து 294 ஓட்டங்ளை எடுத்தது.

இதில் அணித்தலைவர் குமார் சங்ககார 135 ஓட்டங்களுடனும் பிரசன்ன ஜெயவர்த்தன 12 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் உள்ளனர்.

பந்துவீச்சில் ரோஷ் 3 விக்கெட்டுக்களையும் சமி, பிராவோ ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப் பேட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# மிஷ்பா, அலி பொறுப்பான ஆட்டம்
# பாகிஸ்தான் தோல்வியைத் தவிர்த்தது
## டெஸ்ட் தொடர் சமநிலையில் முடிபு



(அபுதாபி)

மிஷ்பா உல் ஹக் – அசார் அலி ஜோடியின் பொறுப்பான தற்காப்பு ஆட்டத்தின் மூலம் பாகிஸ்தான் அணி இரண்டாவது டெஸ்ட் போட்டியை சமநிலையாக்கியது.

பாகிஸ்தான் – தென்னாபிரிக்க அணிகள் மோதும் 2 இருபது – 20, 5 ஒருநாள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் அபுதாபியில் விளையாடியது. இதில் தென்னாபிரிக்க அணி இருபது – 20 தொடரை 2:0, ஒருநாள் தொடரை 3:2 என்ற கணக்கில் கைப்பற்றியது.

தொடர்ந்து நடைபெற்ற முதலாவது டெஸ்ட் வெற்றிதோல்வியின்றி முடிபடைந்த நிலையில் இரண்டாவது டெஸ்ட் கடந்த 20 ஆம் திகதி ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணித்தலைவர் மிஷ்பா உல் ஹக் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா முதலாவது இன்னிங்ஸில் 9 விக்கெட்டுக்களைஇழந்து 584 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 434 ஓட்டங்களை எடுத்தது.

இந்நிலையில் முதலாவது இன்னிங்ஸில் 150 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலையில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி இரண்டாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்டுக்களை இழந்து 203 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை நிறுத்தி பாகிஸ்தான் அணிக்கு வெற்றி இலக்காக 354 ஓட்டங்களை நிர்ணயித்தது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி நேற்றைய 5 ஆம் நாள் ஆட்ட நேர முடிபில் 3 விக்கெட்டுக்களை இழந்து 153 ஓட்டங்களை எடுத்த நிலையில் போட்டி வெற்றி தோல்வி இன்றி முடிபடைந்தது.

இதில் அணித்தலைவர் மிஷ்பா உல் ஹக் 58 ஓட்டங்களையும் அஷார் அலி 28 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்து நாலாவது விக்கெட்டுக்கு பிரிக்கப்படாத இணைப்பாட்டமாக 45.2 ஓவர்களில் 87 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக தென்னாபிரிக்க அணியின் டிவில்லியஸ் தெரிவானதுடன் அவ் அணியின் ஜக்கலிஸ் தொடர் நாயகன் விருதை வென்றார். இப் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிபடைந்த நிலையில் தொடர் சமநிலையில் முடிபடைந்தது.

## பரிசளிப்பு விழா

நல்லூர் ஞானோதயா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்புவிழா நாளை காலை 9.30 மணியளவில் பாடசாலை அதிபர் கி.தர்மஜீலன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வேதநாயகம் கலந்துகொள்ளவுள்ளார். (ச–7)

## நாடுமுழு...

நேற்று மழை வெள்ளத்தால் மூழ்கின.

ஆமர் வீதிக்கு அருகாமையில் உள்ள ஜோதவன விகாரை, டி.எஸ். சேனநாயக்க கல்லூரிக்கு அண்மித்த ஹோட்டன் வீதி, விஜேராம வீதி, பொரளை கொட்டாவ வீதி ஆகிய இடங்களில் வெள்ளம் ஏற்பட்தாக பொலிஸ் அவசரப் பிரிவு கூறியது. (ச–5)

## நல்லிணை...

ஒரு மணிவரை மூதூர் பிரதேச செயலகத்தில் சாட்சியங்களை பதிவு செய்யவுள்ளது. அன்று மாலை சம்பூர் பிரதேசத்துக்கான விஜயத்தினை ஆணைக் குழு உறுப்பினர்கள் மேற்கொள்ளவுள்ளனர்.

5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை குச்சவெளி பிரதேச செயலகத்திலும் சாட்சிகளை பதிவு செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச–5)

# சமாதானத்துக்கு பின்னான...

மல் வன்னிப்பகுதி முழுமையாக அழிவடைந்துள்ளது. இவ்வளவு பாரிய அழிவுகளை ஏற்படுத்திய இந்த யுத்தத்தின் மூலம் எமது சமூகத்திற்கு எதுவும் கிடைக்கவில்லை என்ற விரக்தியில் மக்கள் உள்ளார்கள்.

தனிநாடு கோரிக்கையை முத லில் ஏற்படுத்தியது தமிழ்க் கட்சிகளே. அதனையடுத்து சிறு ஆயுதக்குழுவாக உருவாகிய விடுதலைப்புலிகள் இயக்கம் பின்னர் பாரிய இயக்கமாக மாறியது. இந்த நிலையில் விடுதலைப் புலிகளின் போராளிகளுக்கு இந்தியாவிலும் பயிற்சிகள் வழங்கப்பட்டது.

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது விடுதலைப் புலி உறுப்பினர்கள் ஆயுதங்களைக் களைந்து விட்டு மக்களுடன் மக்களாக இருந்து தங்களை காப்பாற்றிக்கொள்ள முற்பட்டார்கள் என்றார்.

இந் நிலையில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் சமூக நல்லிணக்க ஆணைக் குழுவின் உறுப்பினர்களால் வைத்தியர் எஸ்.சிவபாலனிடம் சில கேள்விகள் கேட்கப்பட்டன.

அதன் விபரம் வருமாறு,

**ஆணைக்குழு :** விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து இராணுவக்கட்டுப்பாடு பகுதிக்குச் சென்ற பொதுமக்களை விடுதலைப் புலிகள் சுட்டார்கள் என்பது உண்மையா?

**சிவபாலன் :** இறுதிக்கட்ட யுத்தத்தின் போது கடல் நீரேரி ஊடாக மக்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதிக்கு நடு இரவில் சென்றனர்.

இரு பகுதிக்குமிடையிலான தூரம் 200 தொடக்கம் 300 மீற்றர் ஆகும். இதன் ஆழம் கழுத்துப் பகுதி வரை இருந்தது. புலிகளின் பகுதியில் நடப்பது இராணுவத்தினருக்கு அறிய முடியாது.

நடுநிசியில் மக்கள் சென்றபோது புலிகள் வானை நோக்கி சுட்டார்கள். அதனையடுத்து இராணுவத்தினரும் வானை நோக்கி சுட்டனர். இதனால் மக்கள் அச்சமடைந்து திரும்பி வந்தார்கள் சில சமயம் இராணுவக் கட்டுப்பாட்டுக்கு சென்ற மக்களை விடுதலைப் புலிகள் சுட்டுள்ளனர்.

**ஆணைக்குழு :** விடுதலைப் புலிகள் வைத்தியசாலைக்கு அருகிலா இருந்தார்கள்?

**சிவபாலன் :** வைத்தியசாலையிலிருந்து 200 தொடக்கம் 300 மீற்றர் தூரத்திலிருந்தார்கள்.

**ஆணைக்குழு :** முள்ளிவாய்க் கால் வைத்தியசாலையில் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கும் சிகிச்சை அளித்தீர்களா?

**சிவபாலன் :** விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு 2009ஆம் ஆண்டு ஜனவரிக்குப் பின்னர் சிகிச்சையளித்தோம். அப்போது நாங்கள் வைத்தியர் நோயாளி என்ற உறவிலேயே செயற்பட்டோம்.

**ஆணைக்குழு :** விடுதலைப் புலிகளின் வைத்தியசாலைக் கட்டமைப்பு எவ்வாறு இருந்தது?

**சிவபாலன் :** சிறந்த முறையில் இயங்கியது. அவர்களின் வைத் தியசாலை தனியார் வைத்தியசாலை போன்றே இயங்கியது. 2002ஆம் ஆண்டு ஏற்பட்ட சமாதானத்தின் போது அவர்கள் தேவையான மருந்துகளை சேகரித்து வைத்திருந்தனர்.

அத்துடன் தேவையேற்படும் மருந்துகளை கொழும்பிலிருந்து கொள்வனவு செய்தார்கள்.

**ஆணைக்குழு :** விடுதலைப் புலிகளின் வைத்தியசாலைகளில் நீங்கள் கடமையாற்றியுள்ளீர்களா?

**சிவபாலன் :** விடுதலைப் புலிகளின் வைத்தியசாலைகளில் கடைமையாற்றியுள்ளேன். எனது சேவைக்கு அவர்கள் பணம் வழங்கினார்கள்.

**ஆணைக்குழு :** விடுதலைப்புலிகளின் வைத்தியசாலையில் பொது மக்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டதா?

**சிவபாலன் :** பொதுமக்கள் பணம் வழங்கியே சிகிச்சை பெற்றார்கள்.

**ஆணைக்குழு :** விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த வைத்தியசாலை இயங்குவதற்கு உதவியது யார்?

**சிவபாலன் :** வைத்தியசாலைக்கு தேவையான பணத்தையும் அரசாங்கமே வழங்கியது.

**ஆணைக்குழு :** விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த வைத்திய சாலையில் எவ்வளவுகாலம் கட மையாற்றினீர்கள்?

**சிவபாலன் :** 1996ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டுவரை முள்ளிவாய்க்கால் வைத்தியாலையிலிருந்து கடமையாற்றியுள்ளேன். இக் காலப்பகுதியில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சுமார் 20ஆயிரம் மக்களுக்கு சிகிச்சையளித்துள்ளேன். (ச–5)

# பிணையில் செல்வதற்கு...

பிணையில் செல்வதற்கான அனுமதியை நீங்கள் வழங்கினால் இதற்கு வேண்டிய பிணை ஏற்பாடுகளைச் செய்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான பா.அரியநேத்திரன் தயாராக இருப்பதாக ஜனாதிபதியிடம் அண்மையில் தெரிவித்திருந்தார் என்பதையும் இந்த இடத்தில் குறிப்பிட விரும்புகின்றோம் என இக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நீங்கள் நீதி அமைச்சராக நியமிக்கப்பட்டதை அடுத்து மகிழ்ச்சியடைகின்றோம். அத்துடன் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம். எமது விடயத்தில் இனியாவது நியாயமான தீர்வு கிடைக்குமென நம்புகின்றோம்.

உங்களால் முடிந்தளவு எமது விடயத்தில் கூர்ந்து கவனம் செலுத்தி தற்போதைய சூழ்நிலையில் பிணையில் செல்வதற்காவது விசேட ஏற்பாடொன்றை உங்கள் தலைமையின் கீழ் ஏற்படுத்தி தாருங்கள்.

நாட்டில் தற்போது நல்ல சூழல் உருவாகி உள்ளது. நாட்டில் சகல மாகாணங்களிலும் தடையின்றி நீதிமன்ற செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. எமது நாட்டில் தற்போது அரச கட்டுப்பாடற்ற பகுதியென ஒன்றில்லை. நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இயல்பு நிலை திரும்பியுள்ளது.

கடந்த காலங்களில் ஜனாதிபதியின் தலைமையின் கீழ் வடக்குக் கிழக்கு பகுதிகளில் அபிவிருத்திக் குழுக் கூட்டங்கள் நடைபெற்றன. இவை அனைத்தும் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் இல்லை என்பதைக் காட்டுகின்றது.

எமது பெற்றோர்கள் சகலவற்றையும் இழந்து ஒரு சட்டத்தரணியைக்கூட அமர்த்த முடியாமல் அவர்களிடத்தில் இருந்த எல்லாவற்றையும் இழந்துபோய் கண்ணீரே வாழ்க்கையாகி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

பல ஆண்டுகளுக்கு மேலாய் நாம் சிறையில் அனுபவிக்கின்ற வேதனைகள் உளவியல் ரீதியாக நாம் அடைகின்ற மன உளைச்சல்கள் எண்ணிலடங்க முடியாதவை.

நாம் சிறையில் இருப்பதால் எமது குடும்பங்கள் மிகுந்த துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள் என்றும் பலமுறை அவர்களிடத்தில் முறையிட்டு இருந்தோம். ஆனால் இதில் எதையும் நிறைவேற்றியதாக இல்லை. ஆனால் எமது கைது தொடர்பான விபரங்களைக் கூட எம்மிடம் தான் கேட்கிறார்கள்.

இதுதான் இன்றைய எமது நிலை. இவை இவ்வாறு இருக்க 01.08. 2010 அன்று நீங்கள் உங்களின் தலைமை காரியாலயத்தில் வைத்து ஒரு ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தியிருந்தீர்கள்.

அதில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விகளுக்கு பதில் கூறும்போது, அரசியல் கைதிகளின் விடுதலைக்காக நான் நேரடியாக தலையிடுவேன் என்றும், சிறைச்சாலைகளுக்கு நேரடியாகச் சென்று அரசியல் கைதிகளின் விபரங்களை திரட்டி அவர்களின் விடுதலை தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து நாடாளுமன்றத்தில் குரல் எழுப்புவதாக உறுதிமொழி அளித்திருந்தீர்கள். இவையனைத்தும் எமது பதிவிலிருக்கிறது.

அத்துடன் பிணையில் செல்வதற்கான அனுமதியை நீங்கள் வழங்கினால் அதற்கு வேண்டிய பிணை ஏற்பாடுகளை செய்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான பா.அரியநேத்திரன் தயாராக இருப்பதாக ஜனாதிபதியிடம் அண்மையில் தெரிவித்தார் என்பதையும் இந்த இடத்தில் குறிப்பிட விரும்புகிறோம் என்றுள்ளது. (ச-5)

## ஜனாதி...

எனத் தெரிவிக்கப்படுகிறது.

பிரிட்டன் அமைச்சர்களை சந்திப்பதற்கும் ஜனாதிபதி முயற்சித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை போர்க் குற்றச்சாட்டின் அடிப்படையில் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கைது செய்யப்பட்டால் அதற்கு எதிராக செயற்பட முடியாதென பிரிட்டன் வெளியுறவுச் செயலாளர் வில்லியம் ஹேக் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## இலங்கை பெண்...

புலனாய்வு பணியகம் இதனை விசாரிக்க வேண்டும் என ஆணை கோரும் மனுவை சென்னை உயர் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளார்.

கடந்த மார்ச் 7ஆம் திகதி அகதி முகாமிலிருந்த இவரது மகளின் வீட்டுக்கு வந்த பொலிஸார் சிலர் கொலைக் குற்றச்சாட்டின் பேரில் அடைக்கப்பட்டிருந்த இவரது கணவன் இவரை பார்க்க விரும்புவதாக கூறி நீதிமன்றம் விதித்திருந்த நடைமுறையை அனுசரிக்காது தாயையும் மகளையும் வானில் அழைத்துச் சென்றனர். இவர்கள் கரூரில் முன்பு அறிந்திராத ஒரு இடத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இடையில் தனது மகளை மட்டும் தனியாக பிரித்தெடுத்து தூரவுள்ள கட்டிடத்துக்கு கொண்டு சென்றதாக பத்மாவதி குற்றஞ்சாட்டுகிறார். பின்னர் தாயும் மகளும் ரேயனூர் முகாமருகில் விடப்பட்டனர்.

அன்றே மகள் தனக்கு தீ மூட்டி தற்கொலை செய்துகொண்டார். மூன்று பொலிஸார் மகளை பாலியல் பல்வந்தம் செய்தனைத் தொடர்ந்து அவர் அத்தீவிரமான முடிபை மேற்கொண்டதை தாயார் தெரிந்து கொண்டார்.

இறந்தவரின் வாக்கு மூலத்தின் மீது முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை. விசாரணை எதுவும் நடக்கவில்லை. உயர் அதிகாரிகளுக்கு முறையிட்டு பலன் ஏதும் இல்லை என பத்மாவதி கூறினார். (ச-5)

## மேலும் 60 மாண...

இதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட மாணவர்கள் 60 பேர் உடனடியாக 10.30 மணியளவில் நுவரெலிய மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு சென்று அனுமதிக்கப்பட்டனர்.

தற்போது இந்த மாணவர்களுக்கு தொடர்ந்து சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

இச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை ராகலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். இதே வேளை இச்சம்பவம்தொடர்பாக நுவரெலியா பொலிஸ்நிலைய பொலிஸாரிடம் வாக்குமூலம் கொடுத்துள்ளதாக பாடசாலை அதிபர் பி.சண்முகநாதன் மேலும் தெரிவித்தார். (ச-5)

## இலங்கைக்கு ஆயு...

ஷ்ணாவுக்கும் இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸுக்கும் இடையில் இடம்பெறலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் போர் இடம்பெற்றவேளையில் சீனா இலங்கைக்கான ஆயுத தளபாட விநியோகத்தராக செயற்பட்டது.

அந்தவேளையில் இந்தியா ஆயுதமற்ற இராணுவ உதவிகளை மாத்திரம் இலங்கைக்கு வழங்கி வந்தது.

எனினும் சீனாவின் ஆதிக்கம் இலங்கையில் அதிகரித்து வருவதை அடுத்தே இந்தியா, இலங்கைக்கு ஆயுதங்களை விற்பனை செய்யும் ஏதுநிலைகள் காணப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் இலங்கைக்கு வரும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா அதிகாரப் பரவலாக்கம் குறித்து அழுத்தம் கொடுப்பார் என்றும் ஐ.ஏ.என்.எஸ். குறிப்பிட்டுள்ளது. (ச-5)

## மரண அறிவித்தல்

### திருமதி திருநாவுக்கரசு வள்ளியம்மை

பண்ணாகத்தை பிறப்பிடமாகவும் காரைநகர் வேதரடைப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வள்ளியம்மை 24.11.2010 (புதன்கிழமை) வேதரடைப்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசைப்பிள்ளை திருநாவுக்கரசு அவர்களின் அன்பு மனைவியும், அமரர்களான மாணிக்கவாசகர், பொன்னுத்துரை (பண்ணாகம்) மற்றும் பாக்கியம் (பண்ணாகம்), பொன்னம்மா (பண்ணாகம்), பரமேஸ்வரி (நவாலி), இராசதுரை (பண்ணாகம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், து.நாகேஸ்வரி (மலாயன் பென்சனியர்) க.தவமலர் (கணக்காளர், ப.தெ.வ.அ. கூட்டுறவுச் சங்கம், சங்கானை) ஆகியோரின் அன்புத் தாயாரும், அமரர் துரைராசா மற்றும் சி.கங்காதரன் (சமுர்த்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம், காரைநகர்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் திருமாறன், மஞ்சு, தயானந்தா, மதிவதனி, ஜனகன் (மாணவன் தேசிய கல்வியியல் கல்லூரி, கோப்பாய்), கமல்ராஜ், கௌரீசன், மீனாட்சிசுந்தர் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சேனாதீர (1ம் வருடம் விஞ்ஞானப்பீடம் யாழ்ப்பாணம்) ரவி, சிறி, சஞ்சு, பவித்திரா, நிதர்சன் ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.11.2010 வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு வேதரடைப்பு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேதரடைப்பு,
காரைநகர்.

தகவல்:
சி.கங்காதரன் (மருமகன்)
தொ.பே.இல.0778435056

(3125)

SAKTHIMICRO SYSTEM
Sankaththanai, Chavakachcheri, 0212270084 0776102609 www.sakthizone.com
கணனி உலகின் மிகப்பெரிய நிறுவனமான Adobe (USA) இன்
அங்கீகாரம் அளிக்கப்பட்ட இலங்கையில் ஒரே ஒரு பயிற்சி நிறுவனம்
Adobe AUTHORISED Training Centre
Master Diploma in Multimedia
Adobe SOLUTION PARTNER
நீங்களும் ஒரு Adobe மல்ரிமீடியா வல்லுனர் ஆகுங்கள்
இந்தியாவில் இருந்து வருகை தரும்
மல்ரிமீடியா வல்லுனர்களால் கற்பிக்கப்படுகின்றது



ஒவ்வொரு மல்ரிமீடியா அனுமதிகளுக்கும்
புத்தம் புதிய கணனி இலவசம்
Hotline 0776102609



அனுமதிகளுக்கு யாழ்ப்பாணம், சாவகச்சேரி
கீழ்வரும் நிலையங்களில்
தற்பொழுது மேற்கொள்ளப்படுகின்றது

| | | |
|---|---|---|
| STP Computer World<br>49, Kasthuriyar Road, Jaffna.<br>0212222674 | Arrul Global Express<br>01, Navalar Road Junction,<br>Jaffna. 0212226113 | CB Computer Academy<br>Station Road,<br>Kondavil<br>0213217903 |

MyWay English சனி ஞாயிறு டிப்ளோமா பயிற்சிநெறி
ஆசிரியர்கள், அரச அலுவலர்கள், பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்களுக்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்
இலக்கண கற்றல், எழுத்துப்பயிற்சி இன்றி இலகுவாக ஆங்கிலத்தினை பேச முடியும்
ஆரம்பம் : 27.11.2010 காலம் : 3 மாதங்கள்
பிரிவுகள் : காலை 8 – 9, 10 – 11, மாலை 1 – 2, 3 – 4, 4 – 5, 5 – 6
(ஏதாவதொரு பிரிவில் கலந்துகொள்ளலாம்)
தனியார் அலுவலர், வங்கியாளர், மற்றும் இளைஞர் யுவதிகளுக்கு அனுமதி இல்லை
பல்கலைக்கழகம் பூர்த்திசெய்து அரச பணி நியமனம் பெறாதோரும் பயிற்சியில் சேரலாம்
MyWay 182, Stanley Rd Jaffna 077 33 63 456

ALLIANCE FRANCAISE DE JAFFNA
The Only Official French Language Centre in Jaffna
Learn French the French Way
சர்வதேச மொழியான French மொழி வகுப்புகள் French Embassy இன் அனுசரணையுடன் பிரெஞ்சு கலாசார மையத்தின் ஊடாக கற்பிக்கப்படுகின்றது.
மாணவர்கள், சிறுவர்கள், வெளிநாட்டிற்கு போகிறவர்கள் எவரும் கற்றுக் கொள்ளலாம்...
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
61, Kachcheri-Nallur Road, Jaffna. Phone: 021 2228093
E-mail: alliancejaffna@yahoo. com
மேலதிக விபரங்களை நேரில் / தொலைபேசியினூடாகப் பெறலாம்.
(3108)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.11.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.